# தர்க்க பாஷை

பதிப்பாசிரியர்:
கலாநிதி சோ. கிருஷ்ணராசா

மெய்யியற்றுறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாதேவி பொன்னம்பலம்
7/12/89

# தர்க்க பாஷை

பதிப்பாசிரியர்:
கலாநிதி சோ. கிருஷ்ணராசா

மெய்யியற்றுறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் இயற்றப்பட்ட தருக்க பாஷை என்ற இந் நூல் வடமொழியில் கேசவ மிஸ்ரர் என்பாரால் இயற்றப் பட்ட தர்க்க பாஷை என்ற நூலின் தழுவலாகும். வடமொழித் தர்க்க பாஷையின் காலம் கி.பி. பதின்மூன்றும் நூற்றாண்டாகும். நியாய-வைசேடிக் மரபில் குறிப்பிடத்தக் முக்கியத்வம் பெறும் இந் நூலிற்குப் பல உரைகள் உண்டு. கோவர்த்தன மிஸ்ரர், சின்ன பட்டர், என்போர்கள் முறையே தர்க்கபாஷா பிரகாசிகை, தர்க்க பாஷா பிரவேசம் என்ற உரை விளக்கங்களைச் செய்தனர். நாராயண பட்டர், குண்டு பட்டர், பிலிபட்டர், முராரி பட்டர் என்போர்கள் செய்த உரைகளும் வடமொழித் தர்க்க பாஷைக்குண்டு. இவைதவிர கோபிநாதரின் உஜ்ஜவாலா, ரோம வில்வ பட்டரின் தர்க்க பாஜா பாவ, ராமலிங்கரின் நியாயசம்கிரக, மாதவதேவரின் சரமஞ்சரி, பாஸ்கர பட்டரின் பரிபாஷ தர்ப்பணம், நாகேச பட்டரின் யுக்திமுக்தாவலி, கணேச தீட்சதரின் தத்வ பிரபோதினி, விஸ்வகர்மாவின் நியாய பிரதீபிகை எனப் பல உரைகள் இருப்பது இந்தியு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவையியலில் தர்க்க பாஷையின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டப் போதுமானது.[1]

தமிழில் வெளிவந்த பிற தருக்க நூல்களான தருக்கசங்கிரகமும், தர்க்ககௌமுதியும் முறையே வடமொழியில் அன்னம்பட்டராலும், பாஸ்கரராலும் இயற்றப்பட்ட நூல்களின் தழுவல்களேயாகும். மூலநூலாசிரியர்கள் இருவரினதும் காலம் பதினேழாம் நூற்றாண்டாகும்.[2]

தமிழில் தருக்க நூற்கருத்துக்களைத் தொகுத்துத் தரும் நூல்களில் மணிமேகலை காலத்தால் முந்தியது. சமயக் கணக்கர் தம் திறம் கேட்ட காதையிலும், தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதையிலும் தருக்கக் கருத்துக்கள் ஓரளவு விரிவாகக் காணப்படுகின்றன.

---

1. S.Chandra Vidyabusana, <u>A History of Indian Logic</u>, Culcutta 1920 P.381-385

2. Ibid P.388.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிமேகலையில் காணப்படும் தருக்கக் கருத்துக்கள் மிகப் பழமை வாய்ந்தனவென்றும், அவை தருக்க சங்கிரகம், அன்னம்பட்டீயம், சிவஞான சித்தியார் சுபக்க உரைகளிலிருந்தும் வேறுபட்டதென்றும், மணிமேகலையிற் காணப்படும் கருத்துக்களைக் கூறும் தருக்க நூல்கள் இக்காலத்து வழக்கில் இல்லை என்றும் உ.வே.சாமிநாதையர் குறிப்பிடுகின்றார்[3]. தருக்க நூற் கருத்துக்களைக் கூறும் பிறிதொரு தமிழ்நூல் சிவஞான சித்தியார் ஆகும். சித்தியார் சுபக்கத்திலுள்ள அளவையிலக்கணம் கூறும் பதினொரு பாடல்களும் சைவசித்தாந்த மரபிற்கிணங்க தருக்கக் கருத்துக்களைக் கூறுகின்றன[4].

---

3. <u>மணிமேகலை உ.வே.சாமிநாதையர் பதிப்பு</u> (மூன்றும் பதிப்பு 1931) பக்.௩௫0

4. சிவஞானசித்தியார் சுபக்கத்திற்கு மு.திருவிளங்கம் எழுதிய புத்துரையில் அளவையியல்க்கணம் விபரமாக ஆராயப்பட்டுள்ளது. <u>சிவஞானசித்தியார் மு.திருவிளங்கம் புத்துரை</u>, சோதிடப்பிரகாச அச்சுயந்திரசாலை. கொக்குவில், 1915.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிமேகலை, சித்தியார் ஆகிய இரு நூல்களிலும் கூறப்படும் தருக்கக் கருத்துக்கள் செய்யுள் வடிவிற் காணப்படுவதனல் கற்-போர்க்குச் சிரமத்தைத் தருகின்றன.

தருக்க பாஷையே முதன்முதலில் தமிழில் தோன்றிய உரைநடையிலமைந்த தருக்க நூலாகும். வடமொழியில் கேசவ மிஸ்ரரால் இயற்றப்பட்ட இந்நூல் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளினுல் தமிழில் மொழிபெயர்த்தியற்றப்பட்டதாகும். சிவப் பிரகாச விகாசம், சதமணிமாலை, வேதாந்த சூடாமணி, சித்தாந்த சூடாமணி என்பன இவரெழுதிய சமய-தத்துவ நூல்களாகும். சிவப்பிரகாசரின் சதமணிமாலை சைவசித்தாந்த நூலாகவும், வேதாந்த சூடாமணி சங்கரவேதாந்த நூலாகவும், சித்தாந்த சிகாமணி வீரசைவ நூலாகவும் உள்ளன[5].

---

5. தமிழ் இலக்கியக் கொள்கை 4ம் தொகுதி
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை 1979.
பக். 225-264.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவப்பிரகாசர் சமயத்தால் வீரசைவராக இருந்த பொழுதும் சைவசித்தாந்த, வேதாந்தக் கருத்துக்கள் அவருக்கு உடன்பாடானவையாகவே இருந்தன. சிவப்பிரகாசர் வரலாற்றை எழுதிய சு.அ.இராமசுவாமிப்புலவர் சிவப்பிரகாசர் சிதம்பரத்தில் வாழ்ந்த காலை சிவப்பிரகாச விகாசம், தர்க்க பாஷை, சமமணிமாலை, நால்வர் மணிமாலை என்றும் நூல்களை இயற்றினர் என்றும், பின்னர் காஞ்சிபுரத்தில் வாழ்ந்த காலத்தில் வேதாந்த சூடாமணி, சித்தாந்த சிகாமணி முதலிய நூல்களை இயற்றினர் என்றும் குறிப்பிடுகின்றார்.6

வீர சைவத்தின் ஆரம்ப காலங்களில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் முதன்மை பெற்றனவாயிருந்தன.

---

6. பிரபுலிங்கலீலை சு.அ.இராமசாமிப் புலவர் குறிப்புரை சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம் சென்னை 1954. பக். அ-கரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனல் படிப்படியாக சங்கரரது கருத்துக்கள் வீர சைவத்தில் மேலாதிக்கம் பெறலாயின. 19ம் நூற்ருண்டில் வீரசைவம் சைவசித்தாந்தத்திலிருந்து விலகி சங்கர வேதாந்தத்தின் ஆழுகைக்கு முழுவதும் உட்பட்டு விட்டது[7]. இக் கருத்தை நாம் ஏற்றுக் கொண்டால் சிவப்பிரகாசர் இத்தகையதொரு மாறும் காலகட்டத்தில் வாழ்ந்தார் என்றே கொள்ளுதல் வேண்டும்.

எவ்வாறிருப்பினும், தமிழில் பாரம்பரியமான சமய–தத்துவ கல்விக்கு முன்னேடியாக அமைந்த தருக்க நூல் என்ற வகையில் தருக்க பாஷைக்கு முக்கிய இடமுண்டு. மேலும் சைவசித்தாந்தம் கூறும் கருத்துக்கள் அனைத்திற்குமான தருக்க நூற் பிரமாணத்திற்கு தருக்க பாஷை ஒன்றே ஆதாரமாயமைகிறது.

---

7. தமிழ் இலக்கியக் கொள்கை 4ம் தொகுதி, சென்னை 1979. பக். 225–264.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவப்பிரகாசர் பதினேளாம் நூற்றூண்டில் வாழ்ந்தவரார்வார். இதன் பின்னரேயே சிவஞான சுவாமிகள் பதினெட்டாம் நூற்றூண்டில் அன்னம்பட்டரின் தருக்க சங்கிரக தீபிகையை தமிழில் மொழிபெயர்த்தியற்றினுர். இதனை ஆறுமுகநாவலர் பரிசோதித்துப் பதிப்பித்தார். 8

பதினேளாம் நூற்றூண்டில் வாழ்ந்த பாஸ்கரரின் தர்க்க கௌமுதி என்ற நூல் வெ.குப்புஸ்வாமிராஜா என்பவரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு 1899ம் வருடம் பதிப்பிக்கப் பட்டது. 9 இவை தவிர் வித்துவான் தெல்லிப்பழை சிவாநந்தையர் வடமொழி நூல்களான தருக்க சங்கிரகத்தையும் அதன் உரைகளான நியாயபோதினி, பதகிருத்தியம், அன்னம் பட்டீயம், நீலகண்டீயம் என்பனவற்றை மொழி பெயர்தியற்றி 1910ல் பதிப்பித்தார் 10.

---

8. தருக்க சங்கிரகம் ஆறுமுகநாவலர் பதிப்பு. 7ம் பதிப்பு. வித்தியாநுபாலனயந்திரசாலை 1929.
9. தருக்க கௌமுதி, வி. கோவிந்தன் பதிப்பு மதராஸ் ரிப்பன் அச்சுயந்திரசாலை 1890.
10. தெல்லிப்பழைச் சிவாநந்தையர், தருக்க சங்கிரகம்-நியாய போதினி, பதகிருத்தியம், அன்னம்பட்டீயம், நீலகண்டீயம். சோதிடப் பிரகாச யந்திரசாலை கொக்குவில், 1910.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபுவழியான தருக்க நூற்கல்வியில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுவது நீர்வேலிச் சங்கர பண்டிதரின் சைவப் பிரகாசனம் என்ற நூலாகும். சைவசித்தாந்தக் கருத்துக்களை விளக்குவதற்குரிய தருக்க நூலாக இது காணப்படுகிறது. இந் நூலின் இரண்டாம் பதிப்பு 1925ம் ஆண்டு வெளியானது[11] முதற்பதிப்பு 1880ல் வெளியானதாக இரண்டாம் பதிப்பிலிருந்து அறியக் கூடியதாயுள்ளது.

சிவப்பிரகாசரின் தருக்க பாஷை யை பதிப்பித்தவர் கு. கதிரைவேற்பிள்ளை. இரண்டாம் பதிப்பு 1880ல் வெளியாயிற்று. முதற் பதிப்பு வெளிவந்த ஆண்டு தெரியவில்லை. இன்று தருக்க பாஷையை பெயரளவிலாவது அறிந்தவர் வெகு சிலவே. நூற் பிரதிகள் கிடைப்பது மிகவும் அரிது. மூன்றும் பதிப்பான இப்பதிப்பிற்குரிய நூற்பிரதியை பேராதனைப் பல்கலைக் கழகத்து இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் இரா. வை. கனகரத்தினம் தந்துதவினார்.

---

11. நீர்வேலிச் சங்கரபண்டிதர், சைவப்பிரகாசனம், சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம். சென்னை 1925.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பதிப்பில் வழுக்கள் பல களையப்பட்டதனைத் தவிர மாற்றங்கள் எதுவும் செய்யப்படவில்லை. பதிப்பாசிரியர் குறிப்புக்களும் விளக்கங்களும் அடைப்புக் குறிப்புக்குள் தரப்பட்டுள்ளன. வடமொழித் தருக்க நூற் கருத்துக்களை விளக்கியுரைத்த நியாய சிரோமணி சி. சுப்பிரமணிய சாஸ்திரிகளுக்கும் இந்நூலை கல்லச்சுப் பதிவில் உருவாக்க சிரமம் பாராது ஒத்துழைத்த செல்வி. க. வாசுகிக்கும் எனது நன்றிகள். எல்லாவற்றிற்கும் மேலாக இதனை நூலாக வெளிக் கொண்டுவர உதவிய யாழ். பல்கலைக்கழக கலைப் பீடத்திற்கும், கலைப் பீடாதிபதி பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

1988.12.28 சோ. கிருஷ்ணராஜா.

***************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் பதிப்பின் முதலட்டை

தர்க்கபாஷை

இந்நூல்

ஊர்காவற்றுறை

குமாரசாமி முதலியார் கதிரைவேற்பிள்ளை

நீதிபதி

வடநா லோடாராச்சி செய்து பரிசோதித்தச்சிடுவித்தனர்

(இரண்டாம் பதிப்பு)

JAFFNA

STRONG & ASBRY PRINTERS

1880.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழு பதார்த்தங்களைக் கூறுஞ் சித்தாந்த முத்தாவலி முதலிய நவீன தர்க்கம் போலாது பதினறு பதார்த்தங்களைக் கூறும் பிராசீன தர்க்கமாகிய இந்நூல் சம்ஸ்கிர்த பாஷையிற் சிவகேசவ மிசிரனலியற்றப்பட்டுத் துறைசை மங்கலஞ் சிவப்பிரகாசராற் றமிழில் மொழிபெயர்க்கப்பட்டுக் காலத்திற்குக் கால மொன்றன் பின்னென்றுயேட்டுப் பிரதிகளி லெழுதப்பட்டு வழுவளைந்து வசன மயங்கிச் சிக்குண்டு பயன்படாது கிடந்ததனை யாம் பரிசோதித் தெமது கிஞ்சிற் புத்திக் கியன்ற வாறே வழுவறுத்துச் சிக்கறுத்துப் பயன்படு நூலாக்கி யச்சிடுவித்தாம். இதனை யாம் முதலா முறை யச்சிடுவித்தபோது யாழ்ப்பாணத்தில், நமக்ககப்பட்டிருந்த தொரே யேட்டுப் பிரதியே. அப் பிரதியின் கண்ணுள்ள வழுக்களைக் களைதற்குச் சம்ஸ்கிர்தத்திலியற்றப்பட்ட கௌதமரது நியாய சூத்திர விருத்தியுஞ் சித்தாந்த முத்தாவலியும் உபகார கருவிகளாயின. முதலாம் பதிப்புப் பகிரங்கமாயின பின் சிவகேசவமிசுரனியற்றிய சம்ஸ்கிர்தத் முதனூல் நமக் ககப் பட்டமையாலம் முதனூலொடு தமிழ் மொழிபெயர்ப்பையெதிர் வைத்தாராய்ந்து சுத்தப்படுத்தி யிவ் விரண்டாம் பதிப்புத் தரலாயினேம்.

இந்நூல் கௌதமர் விதித்த தர்க்கத்தின் வழக்கதாயினுவ், காணுதர் தந்த வைசேடிகத்தோடு கலப்புற்றிருக்கின்றது.

தர்க்க பாஷையாகிய இந்நூல் தர்க்க சூடாமணி, தர்க்க பரிபாஷை யென்றும் வழங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பிரமாணம்.
   1.1. காட்சி
   1.2 அனுமானம்
      1.2.1. தன்பொருட்டனுமானம்.
      1.2.2 பிறர்பொருட்டனுமானம்.
      1.2.3 அன்னுவயவெதிரேகி.
      1.2.4 கேவல வெதிரேகி
      1.2.5 கேவலாந்நுவயி.
   1.3. உவமானம்.
   1.4. சப்தம்
   1.5. பிராமாண்யம்.
2. பிரமேயம்.
   2.1 ஆன்மா
   2.2 உடம்பு
   2.3 இந்திரியம்
      2.3.1 ஆக்கிராணம்.
      2.3.2 இரசனம்
      2.3.3 சட்சு
      2.3.4 துவக்கு
      2.3.5 சுரோத்திரம்
      2.3.6 மனம்

---

1. பொருளடக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.4. அருத்தம்.

2.4.1 திரவியம்.

2.4.1.1 பிரிதிவி.
2.4.1.2 அப்பு
2.4.1.3 தேயு
2.4.1.4 வாயு
2.4.1.5 ஆகாயம்.
2.4.1.6 காலம்
2.4.1.7 திக்கு
2.4.1.8 ஆத்மா
2.4.1.9 மனம்

2.4.2 குணம்.

2.4.2.1 உருவம்.
2.4.2.2 இரசம்.
2.4.2.3 கந்தம்
2.4.2.4 பரிசம்
2.4.2.5 சங்கியை.
2.4.2.6 பரிமாணம்
2.4.2.7 வேறுதல்
2.4.2.8 சையோகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.4.2.9 விபாகம்

2.4.2.10 பரத்துவம்

2.4.2.11 அபரத்துவம்

2.4.2.12 குருத்துவம்

2.4.2.13 திரவத்துவம்

2.4.2.14 சிநேகம்

2.4.2.15 சத்தம்

2.4.2.16 புத்தி

2.4.2.17 சுகம்

2.4.2.18 துக்கம்

2.4.2.19 இராகம்

2.4.2.20 துவேஷம்

2.4.2.21 பிரயத்தனம்

2.4.2.22 தருமம்

2.4.2.23 அதருமம்

2.4.2.24 சம்ஸ்காரம்

- 2.4.2.24.1 வேகம்
- 2.4.2.24.2 பாவனை
- 2.4.2.24.3 திதித்தாபகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.4.3 கருமம்

2.4.3.1 எழுதல்

2.4.3.2 விழுதல்

2.4.3.3 முடக்கல்

2.4.3.4 நீட்டல்

2.4.3.5 நடத்தல்

2.4.4 சாமானியம்

2.4.4.1 பரம்.

2.4.4.2 அபரம்

2.4.5 விசேடம்

2.4.6 சமவாயம்

2.4.7 அபாவம்

2.5 புத்தி

2.5.1 அநுபவம்

2.5.1.1 மெய்மை

2.5.1.2 பொய்மை

2.5.2 நினைவு

2.5.2.1 மெய்மை

2.5.2.2 பொய்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.0 சமுசயம்.

4.0 பிரயோசனம்.

5.0. திட்டாந்தம்.

5.1 ஒத்த தருமி திட்டாந்தம்

5.2 வைதருமி திட்டாந்தம்

6.0 சித்தாந்தம்.

6.1 சர்வ தந்திரம்

6.2 பிரதி தந்திரம்

6.3 அதிகரணம்

6.4 உடம்பாடு.

7.0 அவயவம்.

'.1 பிரதிஞ்ஞை

7.2 ஏது

7.3 உதாரணம்

7.4 உபநயம்

7.5 நிகமனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.6 மனம்

2.7 பிரவிருத்தி

2.7.1 தருமம்

2.7.2 அதருமம்

2.8 தோஷம்

2.8.1 காமம்

2.8.2 வெகுளி

2.8.3 மயக்கம்

2.9 பிரத்திய பாவம்

2.10 பலம்

2.11 துக்கம்

2.12 அபவர்க்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. தருக்கம்
9. நிர்ணயம்
10. வாதம்
11. சற்பம்
12. விதண்டை
13. ஏத்துவாபாசம்
   13.1 அசித்தம்
      13.1.1 ஆசிரையாசித்தம்
      13.1.2 சொரூபாசித்தம்
         13.1.2.1 விசேடணாசித்தம்
         13.1.2.2 விசேடியாசித்தம்
         13.1.2.3 அசமர்த்த விசேடணாசித்தம்
         13.1.2.4 அசமர்த்த விசேடியாசித்தம்
      13.1.3 வியாப்பியத்துவாசித்தம்
         13.1.3.1 சாத்தியத்துடனிகழ் -சியில்லாதது
         13.1.3.2 சோபாதிக சம்ட
   13.2 விருத்தம்
   13.3 அனேகாந்திகம்
         13.3.1 சாதாரண அனேகாந்
         13.3.2 அசாதாரண அனேகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13.4 பிராகரண சமம்.

13.5 காலாத்தியாப திட்டம்

14. சலம்

15. சாதி

15.1 உற்கருஷம்

15.2 அபகருஷம்

16. நிக்கிரகத்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தர்க்க பாஷை

நியாயநூற் பிரவேசஞ் சுருங்கிய கேள்வியினா லடைதலை மடியனாயும் வாஞ்சிக்கின்ற பாலனெவன் அவனுக்கு யுத்தியந்வித தர்க்க பாஷையை, யான் சுருக்கி விளக்குகின்றேன்.

பிரமாணம் (அறிவின்வாயில்), பிரமேயம் (அறிபொருள்) சம்சயம் (ஐயம்), பிரயோசனம், திட்டாந்தம் (பரிச்சயமான எடுத்துக்காட்டு), சித்தாந்தம், அவயவம் (நியாயத் தொடை உறுப்புக்கள்), தருக்கம் (மறுத்துரைத்தல்), சற்பம் (வெற்றி பெறுவதை இலக்காகக் கொண்டு வாதிடல்), விதண்டை (குதர்க்கம்), ஏத்துவா பாசம் (ஏதுப்போலி), சலம் (வெறுஞ்சொல் பற்றி வாதிடல்), சாதி (போலியுத்தரம்), நிக்கிரகத்தானங்களது (தோல்வித்தர்னம்), தத்துவ ஞானத்தால்[1] உயர் சிறப்படைய[2].

---

1. த்த்துவம்—மெய்மை
2. உயர் சிறப்படைதலென்பது வீடடைதல். பிரமாணு —திகளுடைய மெய்மையறிவினன் மித்தியாஞானமாகிய பொய்மையறிவகலும்—அஃதகல, அது காரணமாகப் பிறக்குங் காம வெகுளி மயக்கங்களாகிய தோஷமகலும்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தேசம், இலக்கணம், பரீட்சை:-

இது நியாயத்தினது முதற் சூத்திரம். இதன் பொருள், பிரமாண முதற் பதினாறு பொருள தன்மையறிவால் வீடடைதலுளதாமென்பது.

எவ்வளவும் பிரமாண முதலியவற்றி னுத்தேச இலக்கண பரீட்சை பண்ணப் புடாது, அவ்வளவு மவற்றினுண்மையறி வுண்டாகாது; எங்ஙனம்? பா ஷ்ய காரர் கூறினர் அங்ஙனம் இந்நூலது பிரவிருத்தி (முயற்சி) உத்தேசமும், (பெயராற் பொருளையுரைத்தல்), இலக்கணமும் (சிறப்பியல்பு) பரீட்சையுமென மூன்று வகைத்து.

---

அஃதகல, அதன் காரியமாகப் பிறக்கும் புண்ணிய பாவங்களாகிய பிரவிருத்தியகலும்- அஃதகல, அதன் காரியமாகிய பிறப்பகலும்- அஃதகலுங்கால், அதனோடு நிகழுந் துக்கமகலும்- அத்துக்கத்தினது ஒழிவே நிச்சிரேயசமென்றும் அபவர்க்கமென்றுஞ் சொல்லப்படுகிற மோட்சம், என்னுங் கௌதமர் கருத்தைச் சார்ந்தவராய் நமது தார்க்கீகர் பிரமாணாதி பதினாறு பதார்தங்கள துண்மையறிவால் வீடடைதலுளதாமென்று கூறினரெனக் கொள்க. தர்க்கம் வழுவறக் கற்று அதன் பிரமாணங்களைத் துணைக் கொள்வானொருவன், ஆராயுங் கால், மெய்யிது பொய்யிது வென்றறிவான். கடவுள் அருளிய வேதம் யாது, மையர் இயற்றிய நூல் யாதென்றறிவான்-ஒன்றேனும் பொய் -மை மொழி புகலுமாகமமானது மற்றைப்பரிசினுஞ் சாமர்த்திய காரியமாயினுந் திவ்விய யோக்கிய முடையதன்று, மானுட சிருட்டி யாதல் வேண்டு மென்றறிவான்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தேசமாவது பெயர் மாத்திரையாற் பொருளைச் சொல்வது. அதுவு மிச் சூத்திரத்தானே பெறப்படும்.

இலக்கணமாவது சிறப்பியல்பு. எங்ஙனமெனின், ஆவிற்குத் தாடி முதலிய உடமை.

இலக்கியத்திற் கிலக்கணம் பொருந்துமோ பொருந்-தாதோவென் றாராய்தல் பரீட்சை. (உத்தேசம் எனப்படுவது பொதுவியல்பு ஆகும். இலக்கணம் சிறப்பியல்பு எனப்படும். அளவையியலில் பொதுவியல்பு, சிறப்பியல்பு என்ற பதங்களினால் குறிப்பிடப்படுவது ஆகமம் கூறும் பொதுவியல்பு, சிறப்பியல்பு என்பனவற்றிலிருந்து வேறு பட்டது. அளவையியற் பொதுவியல்பாவது:- ஒன்றற்குச் சொல்லப்படும் இலக்கணம் பிறவற்றிலுமிருப்பது. சிறப்பியல்பாவது:- ஒன்றற்குச் சொல்லப்படும் இலக்கணம் அதனிடத்தில் மட்டும் இருப்பதாகும்.)

---

இவ்வகை புரிதலறம் இவ்வகை புரிதன மறம் என்றறிவான். ஆதலால், தர்க்க வித்தியை வீடடைதற்கு வழியாகுமென ஒரு படித்தாய் எவரும் கொள்ளற் பாற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலின் இவ்விலக்கண பரீட்சைகள் பிரமாணாதிகளுடைய உண்மையறிவின் பொருட்டவசியம் வேண்டின. அவற்றுள்ளு முதற்கணுத்தேசித்த பிரமாணத்திற் இலக்கண முறையே கூறப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. பிரமாணம்

பிரமைக்குக் (மெய்யனுபவத்திற்கு) கரணம் (கருவி) பிரமாணம் (அளவை). இதிற் பிரமாண மிலக்கியம், பிரமாகரணத்தன்மை யிலக்கணம்.

அற்றாயிற், பிரமாணம் பிரமைக்குக் கரணமாயி-தைற்குப் பலம் கூறல் (நியாயம் கூறல்) வேண்டும்; கரணத்திற்குப் பலமுடைமை நியமமாதலின் அஃதொக்கும்; அதற்குப் பிரமையே யலம்.

பிரமை:- பிரமாணத்திற்குப் கரணமாகக் கூறப்பட்ட பிரமையாவது யாது? யதார்த்த அநுபவம் பிரமை; யதார்த்த மென்றது அயதார்த்தமாகிய ஐயத்திரிவு தருக்க உணர்வுகட்கு விலக்கு. அது ஸ்மிருதிக்கு வேறாகிய உணர்வு.[1]

---

1. ஸ்மிருதி—நினைவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரணம்:- கரணமாவது யாது? சாதகமங் கரணம் (சாதிப்பதற்குக் காரணம்). உயர்ந்த சாதகஞ் சாதகதமம். உயர்ந்த காரண மென்பதே யிதன் பொருள். சாதகங் காரணம் (சாதிப்பது, காரணம்) என்பன ஒரு பொருட் சொற்கள்.

காரணம்:- காரணமாவ தியாதெனிற் கூறுதும். நியதமாய்ப் பிறிதொன்றற் காதலின்றிக் காரியத்திற்கு முன்னிற்றலுடையது யாது? அது காரணம்; ஆடைக்கு நூலுடா முதலியன் போல்வ. ஆடை தோன்றுழித் தன்னியல் பின்வந்த கழுதை ( ஆடை நெய்வதற்குரிய நூல் முதலாவற்றைச் சுமந்து வந்த கழுதை) முதலியவற்றிற்கு முன்றிற்றலுண்டேயாயினும், அது நியமமன்று.

நூலுருவிற்கு நியதமாய் முன்னிற்றலுண்டே யெனின், அது பிறிதொன்றற்காகும்; ஆடையுருத் தோற்றத்தமைதலின். ஆடையைக் குறித்துங் காரணமெனிற் கற்பனை பெருகும். ஆதலிற் பிறிதொன்றற் காகாமையாய் நியதமாய் முன்னிற் பதன்றன்மை காரணத்தன்மை. பிறிதொன்றற் காகாது நியதாமாய்ப் பின்னிற்பதன் றன்மை காரியத்தன்மை.

ஒருவன், காரியத்தாலே தொடரப்பட்ட அன்றுவயவியதிரேகி (அன்றுவயம்-உடன்பாடு, வெதிரேகி-எதிர்மறை. உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் வியாத்தியுடையது அன்றுவயவியதிரேகி) காரணமென்றான்; அது பொருந்தாது; நித்தியவிபுவாய (நித்திய வியாபகமுடைய) வான் முதலியவற்றிற்குக் காலத்தாலு மிடத்தாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியதிரேக மின்மையிற் (எதிர்மறையின்மையிற்) காரணமன்மை (காரணமின்மை) வரவேண்டுதலின்.

<u>சமவாயி காரணம்</u>:-

காரணமுஞ் சமவாயி, அசமவாயி, நிமித்தம் என்றும் கூறப்பாட்டான் மூவகைப்படும். (சமவாயி- உள்ளியல் பாயிருக்கும் காரணம். நூல் ஆடையின் உள்ளியல்பாயுள்ளதுபோல. அசமவாயி-உள்ளியல்- பற்ற காரணம். நூலின் நிறத்தை ஆடை பெறுதல் உள்ளியல்பற்ற காரணமாகும். மேற் குறித்த இரு பிரிவிலும் உள்ளடங்காததே நிமித்த காரணம். இராட்டினம் ஆடைக்கு நிமித்த காரண- டதகும்.) அவற்றுள் எதன்கட் சமவேதித்துக் (ஒற்றுமைப்பட்டு) காரியந் தோன்றும், "அது சமவாயிகாரணம். எங்ஙனம்? நூலின்கண்ணே யாடை சமவேதித்துத் தோன்றும்; நாடா முதலியவற்றிலில்லை."

அற்றாயின், ஆடைக்கு நூலோடும் நாடா முதலியவற்றோடுஞ் சம்பந்தமுளதாக, நூலின் கண்ணே யாடை சமவேதித்துத் தோன்றும்-நாடா முதலிய-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றின்க ணில்லை "யென்ப தெங்ஙனம்? அஃதொக்கும்; அச் சம்பந்தம்" சையோகமுஞ் (கூட்டமுஞ்) சமவாயமுமென (ஒற்றுமையுமென) இருவகைப்படும். அவற்றுள், நீக்கமின்றிருப்பவற்றின் சம்பந்தம், சமவாயம்; ஏனையவற்றது சையோகமே. நீக்கமின்றிருப்பன யாவை? எவற்றுளொன்று நசியாததாய் மற்றொன்றைப் பற்றியே நிற்கும், அவை நீக்கமின்றிருப்பன. எங்ஙனம்? அவயவாவயவிகள் குணகுணிகள், வினைவினையர்கள், சாதிவியத்திகள், விசேட நித்தியத் திரவியங்க ளென்பனவே. அவையவி முதலியன முறையே கெடாதனவாய அவையவ முதலியவற்றைப் பற்றியே நிற்கும்; கெடுமவத்தையிற் (கெடுமிடத்து) பற்றுமையே நிற்கும். எங்ஙனம்? நூலது கேட்டின் ஆடையும் ஆசிரயத்தது[1] கேட்டிற் குணமும். கெடுதற்றன்மையாவது கெடுதற் காரணக் கூட்டங் கூடுதல். நூலாடைகளும் அவையவாவவிக ளாதலின், அவற்றது சம்பந்தஞ் சமவாயம்; நீக்கமின்றிருத்தலின். நாடா ஆடை கட்காயிற் சமவாயமின்று (ஒன்றுமையில்லை); நீக்கமின்றிருத்தலின்மையின். நாடா ஆடையைப் பற்றி நிற்றலும் இன்று. ஆதலின் அவற்றது சம்பந்தஞ் சையோகமே. ஆதலின் இங்ஙன மாடை நூலிற் சமவேதம் (ஒற்றுமைப்பட்டுள்ளது). எதன்கட் சமவேதித்துக் (ஒற்றுமைப் பட்டுக்) காரியந் தோன்றும், அது சமவாயிகாரணம், ஆதலின் நூல்களே யாடைக்குச் சமவாயிகாரணம்; நாடா முதலியன அல்ல ஆடையுந் தற்புணருருவ (தன்னுக்கம்) முதலியவற்றிற்குச்

---

1. ஆசிரயம்-பற்றுக்கோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமவாயி காரணம். இங்ஙன மட்பிண்டமுங் (மண்ணும்) குடத்திற்குச் சமவாயிகாரணம். குடமுந் தற்புணருருவ முதலியவற்றிற்குச் சமவாயி காரணம். அற்றாயின், எப்பொழுது குடமுதலியன தோன்றும் அப்பொழுதே தற்புணருருவ முதலியனவுந் தோன்றும்— ஆதலின் ஒரு காலத்திற் றோன்றின—ஆதலிற் குணகுணிகட் கிடவலக்கோடு போலக் காரிய காரணத் தன்மையே யில்லை, முற்பிற்பாடின்மையின்—ஆதலிற் குடந் தற்புணருருவ முதலிய--வற்றிற்குச் சமவாயி காரணமன்று—சமவாயிகாரணங் காரண விசேடமாதலின்—எனிற் கூறுதும்.

குணகுணிகட் கொருகாலத் தோற்றமின்று. ஆயின், திரவியங் குணமிலியாயே முற்றோன்றும்; பின் அதிற் சமவேதித்துக் (ஒற்றுமைப்பட்டுக்) குணங்--டோன்றும். ஒரு காலத் தோற்றமாயிற், குண--குணிகட்கு, ஒரு காரணக் கூட்டத்தனவாதலில், வேறு--பாடில்லாதல் வேண்டும்; காரிய வேறுபாடு காரண வேறுபாட்டி னியதமாதலின். ஆதலின் முற்கணத்திற் குணமிலியேயாய குடங் குணங்கட்கு முன்னிற்பது. திரவி-யங் குணங்கட்குச் சமவாயிகாரணமாம். அப்பொழுது காரணவேறுபாடு முண்டு. குடங் குடத்தைக் குறித்துக் காரணமன்றே; ஒன்றற்கே முற்பிற்பாடின்மையின். குடந் தானே தன்னைக் குறித்து முன்னிற்பதும் பின்னிற்பது மில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் குணங்களைக் குறித்து முன்னிற்றலின், திரவியங் குணங்கட்குச் சமவாயி காரணமாம். அற்றாயின், இங்ஙனமாயின், குட முற்கணத்திற் கட்புல மின்மையாதல் வேண்டும். அருவத் திரவியத்துவமாதலில்; காற்றைப் போல. எத்திரவியம் பரிமா உற்பூதவுரு வமுடையது, அத் திரவியங் கட்புலப்படுவது: திரவியமன்மையுமாதல் வேண்டும்; குணத்திற் கிடனாதற்றன்மையின்மையின்: குணத்திற் கிடனாவது திரவிய-மென்பது திரவிய இலக்கணம். அஃதொக்கும்; மிகவு நுண்ணிய குடம் முதற்கணத்திற் கட்புலனாற் கிரகிக்கப்படாதாயின் அப்பொழுது நமக் கிடையூ றியாது? ஆதலின் முன்னர்க் குணமிலியாயே குடந் தோன்றுமென்றும் இது துணிவு. இரண்டு முதலிய கணங்களிற் கட்-புலனாற் கிரகிக்கப்படும். முதற் கணத்திற் குணத்திற் கிடனாதற்-றன்மையின்மையிற் றிரவியமன்மையாதலில் லை; சமவாயிகாரணந் திரவியமென்றுந் திரவியலக்கணப் பொருத்தத்தால் யோக்கியதையாற் குணத்திற் கிடமாதலின்.[1]

---

1. நமது தார்க்கிகர் குடந் திடீரென் றுளைந்து உள்மறைந்து கிடக்-குந் திரவியங்களைக் காணுகிற நிபுணமும் தீட்சணமு முடையவரேனுஞ் சிறுபான்மை வழுவுதல் ஊனமல்ல. முன்னர்க் குணமிலியாயே திரவியந் தோன்றும், அதினின்று குணந்தோன்று மென்றுமிது நமக்குத் துணிவன்று. இவ்வாசிரியர் தாமே சொல்லுகிறபடி திரவியமென்பது குணத்திற் கிடனாதலென்னும் இலக்கணமுடையது, குணத்திற் கிடனல்லதாந் தன்மை முதற்கணத்தி லிலதாயின் அக்கணத்தில் அதைத் திரவியமென்று கொள்வதெங்ஙனம்? திரவியமென்பது உளதாயதொன்று. உள-தென்று சொல்லற்பாலது யாது யாது, அது அது யாதேனுமோர் தன்மையினுளதாக வேண்டும். தன்மையின்றியும் திரவியமுளதாமென்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசமவாயி காரணம் :-

யாது சமவாயிகாரணத் தணுகியிருப்பதுந் துணிந்த காரணத் தன்மை யுடையதுமா யிருப்பதுவோ அது சமவாயி காரமென்று கூறப்படும். எங்ஙனம்? ஆடைக்கு நூ லியைபு அசம வாயிகாரணம்; நூ லியைபாகிய குணம் மா(ஆ)டைச் சமவாயிகாரணமுங் குணியுமாகிய நூ ல்களிலே சமவேதித்திருத் தலின், சமவாயிகாரணந் தணித்தாயிருத்தலின், பிறிதொன்றிற் காகாமையு நியதியுமாகிய முன்னிற்றற்றன்மையால் ஆடையைக் குறித்துங் காரணமாதலின். இங்ஙனம் நூ லுருவமு மா(ஆ)டையை யடைந்த உருவிற் க(அ) சமவாயி காரணம்.

---

அனர்த்தக வாக்கியமாம் (பொருளற்ற வாக்கியமாம்). எங்ஙன மெனின் திரவியமீண்டுளதெனவே, அத்திரவியம் பெரியதேனுஞ் சிறியதேனும், ஆனதாக, அணுத்து ணேயேனும் மேருத்து ணேயேனும் ஓரிடத்தைக் கருதவேண்டுமே. அப் பொருள் கண்ணுக்குத் தோன்றுவதாயின், உருவத்தன்மையுடையதாயும், தோன்றாதாயின் அருவத் தன்மையுடையதாயும் இருக்கவேண்டுமே; இவை போல்வனவற்றால் திரவியமுள தென்றறியுங்கால அஃது இன்ன இன்ன பரிசாய் இருக்கின்ற தென்றறியும் அறிவுவிடையமே தன்மை. இத்தன்மையே குணம். ஆதலால் குணமென்பது, தானே திரவியமாகாது, தான் திரவியத்தினின்று பிறிதொன்றாகாதாய்த் திரவியத்தைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்றுயின், ஆடையுருவிற் கா(ஆ)டை சமவாயி காரணம்; ஆதலில், தன்னையடைந்தேயிருக்கின்ற ஒரு தருமத்திற் காடையுருவைக் குறித்த சமவாயி காரணத் தன்மை கூறத்தகும்; சமவாயி காரணம் தனித்தாயிருத்தலின்; நூ லுருவிற்கும் தகுதியன்று, அதற்குச் சமவாயி காரணத் தனித் தனித்தாயிருத்தலின்மையின், இங்ஙன மன்று; சமவாயி காரணத்தின் சமவாயிகாரணத் தனித்தாயிருத்தலும் பரம்பரையாய்ச் சமவாயி காரணத் தனித்தாயிருத்தலின்.

---

கிரகிக்கின்றவரது உள்ளத்தே யுத்தியினுற் பகுக்கப்பட்டுப் பிறர்க்குப் யோகமாதற் பொருட்டுப் பெயர் பிறிது கொடுக்கப்பட்டுக் கிடக்கும் மனோசிருட்டியென்று கொள்க.

குணமென்பதை மனோசிருட்டியாகக் கொண்டு, மனத்தின் கண்ணே கிடந்த குணத்திற்குத் திரவியத்தின் கண்ணே சமவாயந் தோன்றிற்று— ஆதலால் திரவியந் தோன்றுங்காற் குணந் தோன்றிய —தில் லையென்று சொல்லின் ஒருவாறு பொருந்தும். எங்ஙனமெனின் குடமென்பது தோன்றியபின், அதினுருவங் குடத்தினின்று மெழுந்து கட்பொறியி னிகழ்ந்த கதிர்களாற் கிரகிக்கப் படுவதாதலின் அக் கதிர்ச் சொரூபமாகிய உருவமே குடத்தின் குணமாகக் காண்கின்றவனுடைய உள்ளத்திற் கொளக் கிடப்பதால், அக்குணங் குடத்தின் சமவேதமென்றும் அதற்குக் குடஞ் சமவாயமென்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசிதேவி பொன்னம்பலம்



நிமித்த காரணம் :-

யாதொன்று சமவாயி காரணமும் அசமவாயி காரணமு மன்றாய் மற்றுங் காரணமாம், அது நிமித்த காரணமென்று கூறப்படும். எங்ஙனம்? நாடா முதலியன ஆடைக்கு நிமித்த காரணம். இக் காரணங்கள் மூன்றும் உள பொருட்களுக்கே இப் பொருட்காயின், நிமித்த காரணம் மாத்திரம்; அதற் கோரிடத்துஞ் சமவாயமின்மையின், சமவாயமுள பொருளிரண்டிற் றருமமாதலின். இக் காரணங்கள் மூன்றினுள் யாதாயினுஞ் சமவொற்றாய் முயரு மாயின், அதுவே கரணம் ( கருவி; பலத்தையாக்குவது ).

ஆதலின் பிரமைக்குக் கரணம் பிரமாணமென்றுமிவ் விலக்கணந் துணியப்படும்.

---

குடந் தோன்றிய போது குணந் தோன்றவில் லையென்றும் சொல்வதமையும். ஆயினும், இவ்வாசிரியன் இக் கருத்துப் பற்றிக் கூறினரென்று நாம் சொல்லமாட்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரைப்படாத பொருளின் றுணர்வு பிரமாண மென்பது பிரமாண லக்கணமெனின் அஃதன்று; ஒரு குடத்தின் கண்ணே குடமிது குடமிதுவென்று உரைப்பட்டதை யுணருந் தாரை கொளுணர்வுக்குட்கப் பிரமாண்யம் வரவேண்டுதலின். வேறு வேறாகிய குண விசேடத்தோடு கூடிய பொருட்கவர்ச்சியா னுரைப் படாத பொருளின றுணர்த்தற்றன்மை யுண்டென்பதன்று; காட்சியா னுண்ணிய கால வேறுபாட்டினது தெரியாமையின். வேறுபாடு தெரியின் கிரியை முதற் சையோக மீறாய நான்கிற்கும் ஒருமைய பிரமாண மின்றாதல் வேண்டும். பிரமாதருப் பிரமேய முதலிய பல காரணங்கள் பிரமைக் குள. இவையெல்லாங் கரணமோ அல்லதல்லவோ கூறுதும். பிரமாதாவும் பிரமேயமு- மிருப்பினும் பிரமை பிறவாமையினானும் இந்திரியார்த்த சையோகாதி யுண்டாயின் விரைவிற் பிரமை (மெய்யனுபவம்) பிறத்தலினானும், இந்திரியார்த்த சையோகாதியே (கூட்டமே) கரணம். சாதகத் தன்மை விசேஷமின்றாயினும் இவ்வுயர்ச்சியானே யிதற்குப் பிரமாதா முதலியவற்றினின்று மதிசயமாதலின், உயர்ந்த காரணங் கரணமென்று கூறப்பட்டது. இந்திரியார்த்த சையோகாதியே பிரமைக்குக் கரணமாதலிற் பிரமாணம்; பிரமாதா முதலியன அல்ல. அப் பிரமாணங்கள் நான்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.1 காட்சி (பிரத்தியட்சம்)

காட்சியாவது யாது? சாட்சாற் காரியப் பிரமை க்குக் கரணம் பிரத்தியட்சம். இந்திரியத்தாற் றோன்றும், அது, சாட்சாற் காரியப் பிரமை. அஃதுஞ், சவிகற்ப நிருவிகற்பக் கூறுபாட்டால், இருவகைப்படும். அதற்குக் கரண மூவகை; ஒரிடத்திந்திரியம், ஒரிடத்துப் பொருளிந்திரியக் கூட்டம், ஒரிடத்து ஞானம்.

எவ் விடத் திந்திரியங் கரணம்? எப்போது நிருவிகற்ப வுருவப் பிரமை பலமாம், அப்போதிந் திரியங் கரணம். அவ்வாறே உயிர் மனத்தோடு கூடும்; மனம் இந்திரியத்தோடு; இந்திரியம் பொருளோடு; இந்திரியங்கட் கடைந்ததை விளக்குந் தன்மை நியமமாதலின். ஆதலிற் பொருளோடு கூடிய இந்திரியத்தாற் பெயர் சாதிமுத லியைபில்லாத பொருண் மாத்திரமகப்படும். நிருவிகற்ப ஞானம் தோன்றும். அந்த ஞானத்திற் இந்திரியங் கரணம்; துணித்தற்கு நவியம் [1] போல; இந்திரியார்த்தக் கூட்ட ம(அ)வாந்தர(இடை) வியாபாரம். துணித்தற் கருவியாகிய நவியத்திற்கு மரத்தோடு கூட்டம் போல; நிருவிகற்ப ஞானம் பலம்; நவியத்திற்குத் துணித்தல் போல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்விடத்துப் பொருளிந்திரியக் கூட்டங் கரணம்? எப்போது, நிருவிகற்பத்தின் பின்னர் பெயர்சாதிமுதலியையுள்ள, சாத்தனிவன், பார்ப்பானிவன், கரியனிவன் என்னும் விசேடண விசேடியத் தன்மை அகப்படுமோ அப்போ சவிகற்பஞானம் தோன்றும், அப்போது பொருளிந்திரியக் கூட்டங் கரணம்; நிருவிகற்பமே அவாந்தர வியாபாரம் (இடையிலுள்ளது), சவிகற்பஞானம் பலம் (காரணத்தாலாக்கப்படுபடும்).

எவ்விடத்து ஞானம் கரணம்? எப்போது, கூறப்பட்ட சவிகற்பத்தின் பின்னர் வெறுப்பு புத்தி விழைவு அபேட்சைகள் தோன்றும், அப்போது நிருவிகற்பஞானம் கரணம்; சவிகற்பமவாந்தர வியாபாரம்; வெறுப்பு முதலிய புத்திகள் பலம். சவிகற்ப முதலியவற்றிற்கு மிந்திரியமே கரண மென்பாரு முளர்.

நடுவு தோன்றியனவாகிய சந்நிகர்ஷ (சம்பந்தம்) முதலியன எவ்வளவோ அவைய னைத்தும் அவாந்தர வியாபாரம்.

---

1. நவியம்-புதுமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுவகைச் சந்நிகர்ஷம் (சம்பந்தம்):-

பொருளிந்திரியங்களுடைய சாட்சாற்காரியப் பிரமைக்கு ஏதுவாகிய சந்நிகர்கர்ஷம் யாது, அஃதறுவகையே. அவை சையோகம், சையுத்தசமவாயம், சையுத்த சமவேத சமவாயம், சமவாயம், சமவேதசமவாயம், விசேடண விசேடிய பாவமென்பனவே.

எப்போது சையோகசந்நிகர்ஷம்? எப்போது கண்ணுற் குடமிருவென்று குடவிடய ஞானம் தோன்றும், அவற்றது சந்நிகர்ஷச் (சம்பந்தம்)சையோகமே; நீக்கமின்றிருத்தலின்மையின். இங்ஙன மன்மென்றும் மகாவிந்திரியத்தால், எப்போ தான்மவிடைய ஞானம் தோன்றும். அப்போ மன மிந்திரியம்; ஆன்மா பொருள்; அவற்றது சந்நிகர்ஷச் சையோகமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போது சையுத்த சமவாய சந்நிகர்ஷம்?
எப்போது கண்முதலியவற்றாற் குடமடையுருவ முதலியவை, குடத்தின் கண்ணீலவுருவமுண்டென்று கிரகிக்கப்படும், அப்போது கண்ணிந்திரியம்; குடமடை யுருவ முதலியவை பொருள்; அவற்றினது சந்நிகர்ஷஞ் சையுத்த சமவாயமே. கண்ணோடு சையுத்தமான குடத்தில், உருவிற்குச் சமவாயமாதலின், இங்ஙனம் மனத்தால் ஆன்ம சமவேதமாகிய இன்பமுதலியவை கிரகிக்கப்படும் போது மிச் சந்நிகர்ஷமே. குடமடை பரிமாண முதலியவற்றின் கிரகிப்பி னன்கு வகைச் சந்நிகர்ஷமு மிக்ககாரணமென்று வேண்டப்படும்; சையுத்த சமவாய முண்டாயினும், அஃதில்லாத போது, சேய்மைக் கட் பரிமாண முதலியன கிரகிக்கப்படாமையின்.
நான்கு வகைச் சந்நிகர்ஷ மெங்ஙனம்? அவை, இந்திரிய வவயவங்களோடு பொருளவயவங்கட்கு, இந்திரிய வவையவிகளோடு பொருளவையவங்கட்காய சந்நிகர்ஷங்கள்.

எப்போது சையுத்த சமவேத சமவாய சந்நிகர்ஷம்?
எப்போது கண்முதலியவற்றாற் குடவுருவிற் சம

வேதமான உருவத்தன்மை முதலிய சாமானியஞானங் கவரப் படும், அப்போது உருவத்தன்மை முதலியன சாமானியம் பொருள். அவற்றது சந்நிகர்ஷஞ் சையுத்த சமவேத சமவாயமே. எங்ஙனம்? கண்ணோடு சையுத்தமான குடத்தி லுருவஞ் சமவேதம்; அதன் கண், உருவத் தன்மைக்குச் சமவாயமாதலின்.

எப்போது சமவாயசந்நிகர்ஷம்? எப்போது செவிப் புலனல் இருககாரமென் றோசை கிரகிக்கப்படும், அப்போது செவி, இந்திரியம்; ஓசைபொருள்; அவற்றினது சந்நிகர்ஷஞ் சமவாயமே; செவிக்கு வான்வடிவ முண்மையின், ஓசைக்கு வான் குணத்தன்மையுண்மையின், குணகுணிகட்குச் சமவாயமாதலின்.

எப்போது சமவேதசமவாய சந்நிகர்ஷம்? எப்போது செவியிற் சமவேதமான ஓசையில் ஓசைத்தன்மை முதலிய சாமா-நியஞ் சுரோத்திரத்தாற் கவரப்படும், அப்போது செவி இந்திரியம்; அவற்றினது சந்நிகர்ஷஞ் சமவேதசமவாயம்; செவியிற் சமவேதமான ஓசையில், ஓசைத்தன்மைக்குச் சமவாயமாதலின்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போது விசேடணவிசேடிய பாவப்பொருளிந்திரியச் சந்நிகர்ஷம்? எப்போது கண்ணோடு சையுத்தமான நிலத்திற் குடமில்லென்று குடமுதலியவற் றின்மை கிரகிக்கப்படும், அப்போது கண்ணோடு சையுத்தமான நிலத்திற்குக் குடமுதலியவற்றின்மை விசேடியம். குடமில்லது நிலமென்னுமிடத்துக் கண்ணோடு கூடிய நிலத்திற் குட முதலியவற்றின்மை விசேடணம். எப்போது மனத்தோடு சையுத்தமான ஆன்மாவின் என்னிடத் தின்பமில்லென்று சுக முதலியவற்றின்மை கிரகிக்கப்படும், அப்போது மனத்தோடு சையுத்தமான ஆன்மாவுக் கின்ப முதலியவற்றின்மை விசேடியம். இன்பமிலேனென்னுமிடத் தின்பமின்மை விசேடணம். எப்போது செவியிற் சமவேதமான ககாரத்திற்குச் சகாரத்தன்மையின்மை விசேடியம். சகாரத்தன்மையில்லது ககாரமென்புளிச் சுரோத்திர சமவேதமான ககாரத்திற்குச் சகாரத்தன்மை யின்மை விசேடணமாதலில்.

இங்ஙனஞ் சுருக்கத்தாற் கூறுதும். ஐவகைச் சம்பந்தத்தின் சம்பந்தியினது விசேடண விசேடிய பாவ லக்கணமான வொருளிந்திரிய சந்நிகர்ஷத்தால், இன்மை கிரகிக்கப்படுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனஞ் சமவாயமும்; கண்ணோடு சையுத்தமான நூலிற்கு விசேடியமான ஆடை சமவாயம். இந்நூல்களிலே ஆடை சமவாயமென்று கிரகிக்கப்படும். இங்ஙனம் அறுவகைச் சந்நிகர்ஷங் கூறப்பட்டன.

*************************

சங்கிரகமாகவுங் கூறுதும். இந்திரியத் தோற்றப் பிரமை, விகற்ப நிருவிகற்பமென இருபாற்று. ஆங்கதற்குக் கரண மூன்று சந்நிகர்ஷமாறு.

அஃதாமின், நிருவிகற்ப மெய்யாகிய தன்னிலக்கண விடையத் தன்மையாற் காட்சியாக, உரையு மிலிங்கமும் போல அநுகதாகாரத்தை அகப்படுத்தலிற் சாமானிய விடையமான சவிகற்பம், எங்ஙனங் காட்சி? பொருளிற் றோன்றியதற்கே காட்சித்தன்மையாதலின், பொருளு மெய்மையுண்டாயே பிறப்பிப்பதாகலின், தன்னிலக்கணமெய்மை உண்டாயது சாமானியமன்று; பிரமாணத்தாற் றள்ளப்பட்ட உண்மையுடைய பிறிது நீக்க வடிவான அதற்குப் பொய்மையுண்டாதலின்; இங்ஙனமன்று, சாமானியத்திற்கும் (பொதுமைக்கும்) பொருளாந்தன்மை உண்மையின். இங்ஙனம் பிரத்தியட்சங் கூறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(

## 1.2 அனுமானம்

இலிங்க பராமரிசம் (ஆராய்ச்சி) அனுமானம். யாதினு லனுமானிக்கப்படும். அஃதநுமானம். இலிங்க பராமரிசத் தானே பொருளது அனுமிக்கப்படும். ஆதலின் இலிங்க பராமரிச அனுமானம். அது புகை முதலிய ஞானம்; அனுமிதியைக் குறித்துக் கரணமாதலின். தீ முதலிய ஞானம் அனுமிதி; அதன் கரணம் புகை முதலிய ஞானம்.

இலிங்கம் யாது? அதனது பராமரிசம் யாது? கூறுதும். வியாத்திவலத்தாற் பொருளை யுணர்த்துவ திலிங்கம். எங்ஙனம்? புகை தீக் கிலிங்கம். அங்ஙனமன்றே. யாண்டுப் புகை ஆண்டுத் தீயென்று முடனிகழ்ச்சி நியமம் வியாத்தி. அது கிரகிக்கப்படுங்காலே புகை தீயை யுணர்த்தும. ஆதலின் வியாத்திவலத்தாற் தீயுமான மாதலிற் புகை தீக் கிலிங்கம். அதனது ஞானம் இலி-ங்க பராமரிசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்ஙனமன்றே முன்னே அட்டின் முதலியவற்றின் மறித்து மறித்தும புகை கண்டு தீக்காணுநின்றுன், அம்மறித்துக் காண்டலாற் புகை தீக்களது தன்னியல்பான சம்பந்தம், யாண்டுப் புகை ஆண்டு தீயென்று துணியா நின்முன்.

யாண்டு யாண்டு மித்திரைமகன்மை ஆ ணடாண்டுக் கருமையென்ப தொக்கும், ஆயினும், மித்திரைமகன்மைகருமைகட்குத் தன்னியற்கைச் சம்பந்தமின்று, மற்றென்னெனின் ஔபாதிகமே[1]
அடகு முதலிய உணவுப் பரிணமமான உபாதி (குற்றம்) யுள்மையின். அங்ஙனமன்றே, கருமையின் மித்திரைமகன்மை பிர-யோசமன்று, மற்றென்னெனின், அடகு முதலிய உணவுப் பரிணதி வேறு பாடே பிரயோசகம். பிரயோசகமு முபாதி (குற்றம்)யென்று கூறப்படும். புகை தீக்களது சம்பந்தத்தில் ஒரு உபாதியமின்று;

தீக்குப் புகையொடு சம்பந்தத்தில், ஈர விறகின் கூட்டமுபாதி; கொலைமைக் கதன்மசாதனத்தோடு கூடிய சம்பந்தத்தில் நிஷேதித்தத்வ முபாதி (உபாதி); மித்திரை-மகன்மைக்கு கருமை சம்பந்தத்தில் அடகு முதலிய உணவுப் பரிணதி வேறுபாடு உபாதி.

---

1. (உபாதிசம்பந்தமுள்ளது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈண்டுப் புகைக்குத் தீயுடனிகழ்சியில் ஒரு உபாதியுமின்று; உண்டாயின்; அப்போது நிலம்போலக் காணப்படும். ஆதலிற் காட்சியின்மையி னில் லையென்னுந் தருக்கத் துணையுடைய ஊர்வின்மையோடு கூடிய காட்சியாயே உபாதியின்மை துணியப்படும். அங்ஙனமன்றே உபாதி-யின்மைறிற் றேன்றிய வாசனையோடு கூடிய மறித்துக் காண்டலிற் றேன்றிய வாசனையோடு கூடிய உடனிகழ்ச்சி கிரகிக்குங் காட்சியானே புகைதீக்களது வியாத்தி துணியப்படும். ஆதலின் புகைதீக்களுக்குத் தன்னியற்கைச் சம்பந்தம்; ஔபாதிகம் அன்று. தன்னியற்கைச் சம்புந்தம் வியாத்தியென்று கூறப்படும்.

ஆதலின் இந்நியாயத்தாற் புகைதீக்களது வியாத்தி கிரகிக்கப்படுகையின் அட்டிலிற் புகைஞானம் யாது, அது முதலது; மனமுதலிய பக்கத்திற் புகை ஞானம் யாது? அது இரண்டாவது. பிற்பாடு முன் கிரகிக்கப்பட்டதாகிய புகைதீக்களது வியாத்தியை நினைத், தம்மலையின் கண்ணே பின்னர்ப் புகையைப் பராமரிசிக்கின்றுன், இம்மலையிற் தீயால் வியாத்தமான புகையுண்டென்று. இப் புகை ஞானம் மூன்றுவது. இஃதவசியம் வேண்டப்பட்டது. வேறுயின், யாண்டுப் புகை ஆண்டுத் தீயுண்டாக ஈண்டுத் தீயிருத்தலெங்ஙனம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலி னீண்டுப் புகை யுண்டென்னு ஞானம் வேண்டப்படும. இதுவே யிலிங்க பராமரிசம். அதுவும், அனுமிதியைக் குறித்துக் கரண மாதலின், அனுமானம். அதனு லிம் மலேயிற்றீ யுண்டென்னு அனுமிதி ஞானம் தோன்றும்.

அற்றுயின், எங்ஙனம் முன்னர் அட்டிலிற் புகை ஞானம் யாதது தீ யனுமாபக மன்று? அ∴தொக்கும்; வியாத்தி கிரகிக்கப்படாமையின், வியாத்தி கிரகிக்கப்படுகையிலே அனுமிதி தோன்றலின். ஆயின் வியாத்தி துணிந்தபின் அட்டிலின் கண்ணே தீ யனுமிக்கப் படும்? இங்ஙன மன்று; தீயது காட்சியா னைய மின்மையின். ஐயப்படு பொருளனுமிக்கப்படும். எங்ஙனம் பாஉஷியக்காரராற் கூறப்படும்? அனுபலத்திப் (புலப்படாமைப்) பொருளிலும் துணிந்த பொருளிலு நியாயம் பிரவர்த்திக்காது; மற்றென்னெனில், ஐயப்படும் பொருளில், ஆயின், மலே யடைதன் மாத்திரமாகிய மகற்குப் புகைஞானந் தீயை அனுமிக்கப் பண்ணுததென்? இவ்விடத்து ஐயமுண்டன்றே; சாதித்தல் வாதித்தலாகிய பிரமாண மின்மையால், ஐய நியாயத்தா லடைதலின்; அ∴தொக்கும்; கிரகிக்கப்படாத வியாத்தியூான் போலக் கிரகித்து மறந்த வியாத்தியுடைய மகற்கு அனுமானம் பிறவாமையால், வியாத்தி நினைவுமனுமதி யேதுவாதலின். புகை கான்டலா லெழுந்த வாசனை யுடையனுய் ஏதேது புகையது வது தீயது, எங்ஙனம் அட்டிலென்று வியாத்தியை நினைப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலிற் புகைக்காட்சி தோன்றலில் வியாத்தி நினைவு தோன்றுகையின் இதுவும் புகையுடைத்தென்னும் புகை-ஞானம் யாது, அது மூன்றுவது அதுவே தீயை யனுமிக்கப் பண்ணும், மற்றையவல்ல. அதுவே யிலிங்க பராமரிசம். ஆதலி லிங்க பராமரிச அனுமான மென்று மிது துணியப்படும்.

## 1.2.1 சுவார்த்தனுமானம் (தன்பொருட்டனுமானம்)

அவ்வனுமானமுஞ் சுவார்த்தமும் பரார்த்தமுமென இரு வகைப்படும் 1. சுவார்த்தம் தன்னுணர்வின் ஏது. அங்ஙனமன்றே, தானே அட்டில் முதலியவற்றின் விசிட்டமாகிய காட்சியாற் புகைதீக்களது வியாத்தியைக் கிரகித்து, மலை அருகடைந்ததன் கண் டயினையமுடை-யனாய் மலையி னிகழ்வதா யிடைவிடாத மூலத்ததாய் விண்ணுறிஞ்சும் புகை யொழுங்கைக் கண்டு, புகை

---

1. சுவார்த்தம் — தற்பொருட்டு
   பரார்த்தம் — பிறன்பொருட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்டலா லெழுந்த வாசனையுடையனாய் (பழக்கமுடையவனாய்) யாண்டுப் புகை ஆண்டுத் தீயென்று வியாத்தியை நினையா நின்றான், ஈண்டும் புகை யுண்டென்றுணரா நின்றான், ஆதலின் இம் மலையிற் றீயுண்டென்று தானே யுணரா நின்றான். அதுவே சுவார்த்தானுமானம்.

## 1.2.2 பரார்த்தானுமானம் (பிறன்பொருட்டனுமானம்)

தான் புகையாற் றீயை யனுமித்துப் பரார்க்குப் (பிறர்க்குப்) போதிக்கும் பொருட்டுப் பஞ்சாவயவ அனுமான வாக்கியம் யாது கூறுகின்றான், அது பரார்த் தானுமானம். அஃதெங்ஙனம்? மலை தீயுடைத்து; புகை யுண்மையான்; யாது யாது புகை யுடைத்தது வது வது தீயுடைத்து, எங்ஙனம், அட்டில் (அடுக்களை போல்); இதுவு மங்ஙனம். ஆதலி லங்ஙனம், என்பதே. இவ்வாக்கியத்தானேபிரதிபாதிக்கப்பட்ட பஞ்ச ரூபத்தோடு கூடிய அவ்விலிங்கத்தாற் பரனுந் தீயை யுணராநின்றான். ஆதலின் இது பரார்த்தானுமானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.2.3 அன்னுவயவெதிரேகி

இதின், மலைக்குத் தீயுண்மை சாத்தியம். புகையுண்மையேது. அதுவும், அந்நுவயவியதிரேகி; அன்னுவயத்தாலும் (உடன்பாட்டாலும்) வியதிரேகத்தாலும் (எதிர்மறையாலும்) வியாத்தியுடைமையின். அங்ஙனமன்றே, "யாண்டுப் புகை, ஆண்டுத் தீ, எங்ஙனம், அட்டிலில்" என்பது அன்னுவய வியாத்தி; அட்டிலிற் புகைதீக்களது அன்னுவய உண்மையது காட்சியின்.

இங்ஙனம், "யாண்டுத் தீ யில்லை ஆண்டுப் புகையுமில்லை, எங்ஙனம் மடுவில்" என்பது வியதிரேக வியாத்தி; மடுவிற் புகைதீக்களது வியதிரேக இன்மையது காட்சியின்.

வியதிரேக வியாத்திக்குக் கிரமமிது; அன்னுவய வியாத்தியில் யாது வியாப்பியம் (குறைவு), அதனின்மை யீண்டு வியாபகம் (மிகுதி), யாது வியாபகம், அதனின்மை ஈண்டு வியாப்பியமென்று, அங்ஙனங் கூறப்பட்டது. உண்மை வியாப்பியமும் வியாபகமும், இவ்விடத்து மாறுவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலி னிங்ஙனம் புகையுண்மை யேது அன்வயத்தாலும் வியதிரேகத்-தாலும் வியாத்தியுண்டு.

வாக்கியத்தில், அன்னுவய வியாத்தி யொன்றே பிரதரி-சிக்கப்பட்டதேது? அது தொன்றலும் பயனுதலின்; அவற்றுள்ளும், அன்னுவயஞ் செவ்விதாதலிற், பிரதரிசனஞ் செந்நெறியாற் சித்திக்கும் பொருட்டுக் கோடுநெறியாற் சாதித்தல் யோகமாகாமையின்; வியதிரேக வியாத்தி யின்மையினன்று. ஆதலி லிங்ஙனம் புகை யுண்மையே அன்னுவய வியதிரேகியே. இங்ஙன ஏனையவும். அனித்தியத்துவ முதலிய சாதிக்கையிற் கிருதகத்துவ முதலிய ஏதுக்கள் அன்னுவய வியதிரேகிகளாக அறியத் தக்கன.

## 1.2.4 கேவல வெதிரேகி

ஒரோ வொரேதுக் கேவலவியதிரேகி. அஃதெங்ஙனம்? சான் மகத்துவஞ் சாதிக்கையிற் பிராணதியுடைமையேது; எங்ஙனம்? "சீவச் சரீரஞ் சான் மகம்; பிராணதியுடைமையின்; யாது சான்மகமன்றது பிராணதியுடைமைய தன்று, எங்ஙனம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடம்; இச் சீவச்சரீர மங்ஙன மன்று; ஆதலினிங்ஙனமன்று" என்கை. இதிற் சீவச் சரீரத்தினது சான் மகத்துவஞ் சாத்தியம், பிராணாதியுடைமையேது. இது கேவல-வியதிரேசி; அன்னுவய வியாத்தி யின்மையின். அங்ஙன-மன்றோ, யாது பிராணாதியுடைய தது தான்மகம், எங்ஙனம், இதுவென்று திட்டாந்தமில்லை (பெறப்பட்ட முடிபில்லை). சர்வ சீவச் சரீரமும் பக்கமே(சார்பே).

இலக்கணமுங் கேவலவியதிரேசி யேது. எங்ஙனம்? பிரிதிவியின் (மண்ணின்) இலக்கணம் கந்தமுடைமை (நாற்றமுடைமை). இவ் விவாத பதம்[1] பிரிதிவி கந்தமுடைமையின்; யாது பிரிதியன்றது கந்தமுடையதன்று, எங்ஙனம் புனல். இதில், யாது கந்தமுடையது, அது பிரிதிவி, எங்ஙனம், இதுவென்று திட்டாந்தமில்லை.

பிரமாண இலக்கணமாகிய பிரமாகரணத்துவமு மவ்வாறே. அங்ஙனமற்றோ, காட்சி முதலியன பிரமாணமென்று வியவகரிக்கத்தக்கன;

---

1. பதம்-பொருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமாகரணத்துவ மாதலின்; யாது பிரமாணமென்று வியவகரிக்கப்படாதது பிரமா கரண மன்று; எங்ஙனம் காட்சிப்போலி முதலியன. இதில், யாது பிரமாகரணம், அது பிரமாணமென்று வியவகரிக்கத் தக்கது, எங்ஙனம், இது வென்று அன்றுவய திட்டாந்தமில்லை; பிரமாணமாத்திரம் பக்கஞ் செய்தலின். இதில், வியவகாரஞ் சாத்தியம்; பிரமாணத்துவ மன்று; அதற்குப் பிரமாகரணத்துவமாகிய ஏதுவினின்றும் வேறின்மையிற் சாத்திய அபேத தோஊஷம் வருதலின். ஆதலி னிங்ஙனஞ் கேவல வியதிரேகிகள் காட்டப்பட்டன. (கேவலவெதிரேகி எதிர்மறையில் மட்டும் வியாத்தியுடையது.

உதாரணம்:- மண் ஏனைய பிறவற்றிலிருந்தும் வேறுபட்டது. ஏனெனில் அது நாற்றமுடைமையினால், யாது யாது ஏனைய பொருட்களிலிருந்து வேறுபடாதிருக்கிறதோ அது நாற்றமுடைத்தது அல்ல. நீர்போல, இஃது அங்ஙனமன்று, ஆதலின் இங்ஙனமன்று.).

1.2.5 கேவலாந்நுவயி.

வேறேரேதக் கேவலாந் நுவயி. எங்ஙனம்?

" விசேட மபிதேயம்; பிரமேயமாதலின்; யாது பிரமேயம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஃதபிதேயம், எங்ஙனம், குடம்; இதுவு மங்ஙனம். ஆதலினிங்ஙனம்" என்கை. இதில் விசேடத்திற் கபிதேயத்துவஞ் சாத்தியம்; பிரமேயத்துவமேது. அதுவுங் கேவலாந்நுவயியே. யா தபிதேய மாகாதது பிரமேயமு மாகாது; எங்ஙனம், இதுவென்று வியதிரேக திட்டாந்த மில்லை. எவ்விடத்தும் பிராமாணிகப் (பிரமாணப்) பொருளே திட்டாந்தம். அதுவும் பிரமேயமு மபிதேயமும் (உடன்பாட்டில் மாத்திரம் வியாத்தியுடையது,)

(அன்னுவயவியதிரேகி, கேவலவியதிரேகி, கேவலாந்நுவயி என்ற மூன்று பிரிவுகளும் பிறன் பொருட்டநுமானத்தில் இடம்பெறும் வியாத்தியின் இயல்பு பற்றியே வகுக்கப் பட்டவையாகும். )

<u>பஞ்சரூபங்கள்</u>:-

இவ் வந்நுவய வியதிரேகி, கேவலாந்நுவயி, கேவலவியதிரேகி, யென்றுமேதுக்களது மத்தியில், எவ்வேது அன்னுவய வியதிரேகி, யது பஞ்சரூபத்தோடு கூடியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது சாத்தியத்தைச் சாதிக்க வல்லது; ஒரு ரூபத்தானுங் குறைந்த தாகாது.

அப் பஞ்ச ரூபங்கள், பக்கத் தருமத்வஞ் (இயல்பும்), சபக்கத்திற் சத்துவம்[1] (உண்மை), விபக்கத்தில் வியாவிருத்தி[2] (நீக்கம்), அவாதித விடையத்வம், அசத்[3] பிரதிபக்கமென்பனவாம். இப் பஞ்சரூபங்கள் புகையுமைமை முதலிய அன்றுவயவியதிரேகி யேதுக்களி லிருக்கும். புகையுடைமை பக்கமான மலைக்குத் தருமம் (இயல்பு); மலையிலஃதிருத்தலின். இங்ஙனஞ் சபக்கத்தி லுண்மை-சபக்கமாகிய அட்டிலி லிருக்குமென்பது பொருள். இங்ஙனம் விபக்கமாகிய மடுவி னீக்கம்-ஆர்டில் லையென்பது பொருள். இங்ஙனம் புகையுடைமை யவாதிதவிடையம். இங்ஙனமன்றே, புகையுடமையாகிய ஏதுவுக்கு விடயஞ் சாத்திய தருமம். அது தீயுடைமை, யாது பிரமாணத்தாறு மவாதித்ம்- கண்டிக்கப் படாதென்பது பொருள். இங்ஙனம் புகையுடைமை பிரதிபக்க மில்லது. அங்ஙனமன்றே சாத்தியத்தின் விபரீத சாதக ஏத்வந்தரம் பிரதிபக்கமென்று கூறப்படும்.

---

1. சத்துவம்-உண்மை
2. வியாவிருத்தி-நீக்கம்
3. அசத்-இன்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவும் புகையுடைமை யேதுவினின்றே; தோன்றுமையின், ஆதலினிங்ஙனம் பஞ்சரூபங்கள் புகையுடைமை யேதுவிலிருக்கும். ஆதலி னிப் புகையுடைமை தீயுடைமையது கமகட் (ஒன்றை அறிவதற்கு ஏதுவாயுள்ள குறிப்பு); அது தீயுடைமையது சாதகம் (சாதிப்பது).

தீயினது பக்கத்தருமத்துவம், ஏதுவினது பக்கத்தருமத்துவ வலியாற் சித்திக்கும். அங்ஙனமன்றே, அநுமானத்தின் சாமர்த்தியம் வியாத்தியும் பக்கத் தருமத்துவமென இரண்டு. அவற்றுள், வியாத்தியாற் சாமானிய சித்தி; ஏதுவினது பக்க தருமத்துவ வலியாற் சாத்தியத்திற்குப் பக்க சம்பந்தத்துவ விசேடஞ் சித்திக்கும். மலைத் தருமமாகிய புகையுடைமையாற் றீயும் மலைச்சம்பந்தமாயே யநுமிக்கப்படும். வேறுயிற், சாமானியம் வியாத்தி கிரகிப்பதானே சித்தித்தலின் அநுமானத்தாற் பயனென்னை?

வேறு தந்நுவயவியதிரேகி யேது யாதது பஞ்ச ரூபத்தோடு கூடியே நல்ல ஏதுவாம். வேறுயின், ஏதுப்போலி—ஏது வல்ல தென்னுமளவு.

கேவலாந்நுவயி நான்கு ரூபத்தோடு கூடியே தனது சாத்தியத்தைச் சாதிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு விபக்கத்தினீக்க மின்று; விபக்க மின்மையின்.

கேவல வியதிரேகி நான்கு ரூபத்தோடு கூடியே. இதற்குச் சபக்கத்தி லுண்மை யின்று; சபக்கமின்மையின்.

பக்கம், சபக்கம், விபக்கம் யாவை? கூறுதும். ஐயமுடைய சாத்திய தருமத்தையுடைய தருமி பக்கம். எங்ஙனம்? புகை அநுமானத்தின், மலை.

நிச்சித சாத்திய தருமத்தை யுடைய தருமி சபக்கம். எங்ஙனம்? இப் புகை யனுமானத்தின் கண்ணே யட்டில். விபக்கம் நிச்சித சாத்திய மில்லாத தருமி. எங்ஙனம்? ஆன்இடமடு. ஆதலின் இங்ஙனம் அன்னுவய வியதிரேகி, கேவலாந்நுவ்யி, கேவலவியதிரேகியா கிய மூன்றேதுவுங் காட்டபபட்டன. அவற்றின் வேறுபட்டன (மாறுபட்டன) ஏதுப்போலிகள்.

ஏதுப்போலி:-

ஏதிலக்கண ரகிதமாய் ஏதுவைப் போல விளங்குவன ஏதுப்போலிகள்; அவையும் அசித்தம் (பெறப்படாதது), விருத்தம் (மாறுபட்டது), அநைகாந்திகம் (பலமுடிபுகளையுடையது),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகரணசமம் (மறுத லையுடையது), காலாத்திய யாபதிட்டம் (மறுப்புடையது), என்னும் பேதத்தால் ஐவகையே.

<u>அசித்தம்</u> :-

அவற்றுள் அனிச்சித பக்க விருத்தி யசித்தம். அது ஆசிரையாசித்தம், சொரூபாசித்தம், வியாப்பி-யத்துவாசித்தமென மூன்று வகையே.

ஆசிரையாசித்த மெங்ஙனம்? வான்றாமரை (ஆகாயத்தாமரை) மண முடைத்து; தாமரைத் தன்மையால்; பொய்கைத் தாமரைபோல. இதில் வான்றாமரை யாசிரயம்; அஃது மின்றே.

சொரூபாசித்த மெங்ஙனம்? சத்தம் அனித்தியம் கட்புலப்படுதலால்; குடம்போல. இதில் கட்புலப் படுதலேது. அதுவுஞ் சத்தத்திற் கின்றே; சத்தஞ் செவிப்புலப்படுதலின்.

வியாப்பியத்து வாசித்தம் இருவகை; ஒன்று, வியாத்தி கிரகிப்பதாகிய பிரமாண மின்மையின்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றைய நுபாதி யுன்மையின், வியாப்பியத்துவாசித்தம்.
அவற்றின் முதல தெங்ஙன்? யாது சத்து அது கணிகம்[1]
, எங்ஙனம்? முகிற் படலம் சப்தாதியுஞ்
சத்து. சோபாதிகதையாற்சத்திற்கு வியாப்பியத்துவா சித்தங்
கூறில் வேறடைந்த கணிகத்துவம் வேண்டப்படும். இரண்டாவ
தியாது? வேள்வியினிகழுங் கொலையதன் மசாதனம்;
கொலைமையால்; வேள்விப் புறத்துக் கொலைபோல. இதின்,
அதன்மசாதனத்தின்கட் கொலைமை பிரயோசக மின்று.
மற்றென்னை? நிஉஷித்தத்வமே பிரயோசகம்-உபாதியென்று
(குற்றமென்று)மளவு. அங்ஙனமன்றே, சாத்திய வியாபகத்து-
வமாய்ச் சாதனத்திற் கவ்வியாபகத்துவமாதல் உபாதியென
வுபாதியிலக்கணம். அதுவும் நிஉஷித்தத்வத்தின்க ணுண்டு.
நிஉஷித்தத்வஞ் சாத்தியமான அதன்மசாதனத்துவத்துக்கு வியாபகமே;
எங்ஙனம்? யாண்டு யாண்டதன்ம சாதனத்துவம் ஆண்டாண்டவசிய
நிஉஷித்தத்வம். இங்ஙனஞ் சாதனமான கொலைமையை
நிஉஷித்தத்வம் வியாபியாது,

வேள்வியினது பசுக்

கொலையினிஉஷித்தத்வ மின்மை . அன்நிய பிரயுத்தமான
வியாத்தியோடு கூடிய கொலைமை வியாப்பியத்து வாசித்தமே.

---

1. காலநுட்பமுடையது.

விருத்தம் :-

சாத்திய விபரீதத்தோடு வியாத்தம், விருத்தம். அஃதெங்ஙனம்? சத்த நித்தம்; காரியத் தன்மையால்; வான்போல. காரியத்தன்மை சாத்தியமான நித்தியத்துவத்துக்கு விபரீதமான அனித்தியத்துவத்தோடு வியாத்தம். யாது காரியம் அஃதனித்தியமே; நித்தியமன்று. ஆதலிற் காரியத்தன்மை விருத்தம்.

அனைகாந்திகம் :- [1]

வியபிசாரத்தோடு கூடியது அனைகாந்திகம். அஃது சாதாரண அனைகாந்திகம் அசாதாரண அனைகாந்திகம் மென இருவகைத்து. அவற்றுள் பக்க சபக்க விபக்கத்திலிருப்பது சாதாரண அனைகாந்திகம். எங்ஙனம்? சத்த நித்தியம்; பிரமேயத்தன்மையால்; வியோமம் போல. இதில் பிரமேயத் தன்மை யே து. அஃது நித்திய அனித்தியத் திருப்பது. சபக்க விபக்க நீக்கமியாதது அசாதாரண அனைகாந்திகம். நிலநித்தம்; மணமுடைமையால்; வியோமம் போல. மணமுடைமை சபக்கமாகிய நித்தியத்துவ நின்றும் விபக்கமாகிய அனித்தியத்துவ நின்றும் நீக்கம்; நிலமாத்திரையினிருத்தல்.

---

1. (அனைகாந்திகம் பொது, சிறப்பு, அநுபசங்காரிஎன

(சாதாரண அநைகாந்திகம் பொது ஊகாந்திகம் எனவும் அழைக்கப்படும் உ-ம்:- இம் மலை தீயுடைத்து, அளவையால் அளக்கற்பாலதாகலின் என்பதாகும். அளக்கற்பாலதாம் தன்மை நீர்த்தடாகத்திலும் இருத்தலால் போலியாகும். அசாதாரண அநைகாந்திகம் சிறப் னைகாந்-திகம் எனவும் அழைக்கப்படும். சபக்க விபக்கங்களெல்லா-வற்றினும் இல்லாதது. உ-ம்:- சத்தம் நித்தியம், சத்தத்-தன்மையுடைமையினுல். இங்கு சத்தத்தன்மை நித்திய அனித்தியப் பொருள் எல்லாவற்றிலும் இல்லாது சத்தத்தில் மாத்திரமிருப்பதால் போலியாகும்.)

<u>பிரகரணசமம்</u>:-

எவ்வேதுக்குச் சாத்திய விபரீதத்தைச் சாதிக்கு இமத் வந்தரமுண் டாதுவே பிரகரணசமம். எங்ஙனம்? சத்த மனித்தியம்;

---

என மூவகைப்படும் என த்ருக்க கௌமுதி கூறுகிறது. ஆனல் தருக்க பாசையில் முதலிரண்டு மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. ப.கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய தருமமின்மையர்ல் ( நித்தியமான இயல்யற்றதால் ), சத்த நித்தியம்; அனித்தியதருமம் ( அனித்திய இயல்பு ) தோன்றுமையால்; என்பதுவே. இதுவே சற்பிரதி பக்கமென்றுங் கூறப்படும்.

காலாத்தியயாபதிட்டம் :-

பிரமாணாந்தரத்தாற் றவிர்ந்த சாத்தி யின்மையேது வாதித விடையம். . காலத்திய யாபதிட்டமெனவுங் கூறப்படும். எங்ஙனம்? . தீ வெம்மையிலது; பதார்த்தவத்தால்; புனல்போல. இதில் பதார்த்தத்-வமான ஏதுவுக்குச் சாத்தியம் வெம்மையின்மை. அதன்மை காட்சியானே துணியப்பட்டது, பரிசனக் காட்சியால் வெம்மை தோன்றலின். ஆதலி னிங்ஙன மநுமானம் உணர்த்தப்பட்டது. (இது பாதித ஏதுப் போலியாகும். ).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.3. உவமானம்

அதிதேச வாக்கியப் பொருளினைவோடு கூடிய ஆவொப்புமை விசிட்ட பிண்ட ஞானம் உபமானம். எங்ஙனம்? ஆமா வுணராரேயும், எங்ஙனம் ஆ அங்ஙனம் ஆமா, என்றோராரணியத புருஉஷனுற் கேட்டு வனத்துட் புக்கு வாக்கியப் பொருளினைத்துக் கொண்டு, எப்போ, தா(ஆ)வொப்புமை விசிட்ட பிண்டங் காணு நின்றான், அப்போதவ் வாக்கியப் பொருளினைவோடு கூடிய ஆ வொப்புமை விசிட்ட பிண்ட ஞானம் உபமானம்; உபமிதியைக் குறித்துக் கரணமாதலின். ஆ வொப்புமை விசிட்ட பிண்டங் கண்ட பின்னர், இது ஆமா சப்த வாக்கியமான பிண்டமென்று நாம நாமி சம்பந்த பிரதீதி[1] யுபமிதி. அதுவே பலம். இங்ஙனமுபமான முணர்த்தப்பட்டது.

---

1. பிரதீதி - அறிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.4 சப்தம்

ஆப்த வாக்கியஞ் சப்தம். ஆப்தன் உள்ள பொருளை யுபதேசிக்கும் புருஷன், வாக்கியம் (பதங்களின் கூட்டம்), அவாயநிலை (வாக்கியமாக முடியுபெறுந நிற்றல்), யோக்கியதை (தகுதி) அன்மை யுடைய பதங்களினது சமூகம். ஆதலினுலே " ஆபுரவி மகன் யானை யென்னும் பதங்கள் வாக்கியமல்ல; ஒன்றற் கொன் றவாயநிலையின்மையின். தீயால் நனைக்க என்பது வாக்கியமன்று; யோக்கியமின்மையின் (தீக்கு, நனைத்தல் பொருந்தாது). தீ நனைத்தல்கட் கொன்றற் கொன் றன்வய யொக்கியதை யின்றே (ஒன்றிற்கொன்று உடன்படும் தகுதியில் ல்.) "தீயால்" என்று மூன்றுவதால் (ஆல் என்ற மூன்றுவது வேற்றுமையினுல் குறித்த) "நனைத்தல்" ஆகிய காரியத்தைக் குறித்துக் கரணத்தன்மை தீக்குக் கூறப்பட்டது. தீ நனைத்தற் கரணமாம் பொருட்டு யோக்கிய மன்று. ஆதலிற் காரிய காரணபாவ இலக்கண சம்பந்தத்திற் தீ நனைத்தல் கட்கு யோக்கிய மின்மையில் தீயால் நனைக்க என்பது வாக்கியமன்று. இங்ஙனம் ஒவ்வொரு யாமத்தின் ஒருங் குச்சரிக்கப் படாத "வெள்ளை—ஆணவக்—கோலாற்—குணர்க்" என்னும் பதங்கள் வாக்கியமல்ல. (ஒரு

சேர உச்சரிக்கப் படாததால் வாக்கியமல்ல).
(இச் சொற் கூட்டம்) ஒன்றற் கொன் றன்வயயோக்கியதை யுளதாயினும். ஒன்றற் கொன் றவாய நிலை யுள்ளதாயினும் (முடிபு பெற்று நின்றுலும்), ஒன்றற் கொன்று அண்மை யின்மையின் (இடைவெளியில்லாது ஒரு தொடராக உச்சரிக்கப் படாமையி) வாக்கியமன்று. யாவை அவாய நிலையன, யோக்கியதையன, அண்மையன, அவையே வாக்கியம். எங்ஙனம்?" சியோதிட்டோமத்தாற்றுறக்கம் வேண்டியாள் வேட்க" என்பது முதலியன, "ஆற்றங் கரையி லைந்து கனிகளிருக்கின்றன" "ஆவைக் குணர்தி" என்பன முதலிய பதங்கடாமே விளம்பமின்றி யுச்சரிக்கப் பட்டன.

அற்றுயின், இதிற் பதங்க ளவாய நிலையன அல்ல; மற்றென் னெனிற் பொருள்கள்; கனி முதலிய ஆதேயங்கட்கே கரைமுதலிய ஆதார அவாய நிலைமையால்; ஆராயிற் பொருள்களும் அவாயநிலையனவல்ல; அவாயநிலை ஆராயிற் பொருள்களும் அவாயநிலையனவல்ல; அவாயநிலை இச்சை வடிவாய சேதன தருமமாதலின்; அஃதொக்கும் பொருள்க டம்பதங்கள் கேட்பாக்• கொன்றற் கொன்று விடையமான அவாயநிலையைத் தோற்றுவித்தலின், அவாயநிலையன வெனக் கூறப்படும். அதன் வழியா லத னைக் கூறும். பதங்களும் அவாயநிலையனவென உபசரிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதங்களே பொருளைப் பிரதிபாதித்துக் கொண்டு பொருள் வேறுபாட்டு விடைய அவாயநிலையைத் தோற்றுவிப்பவென்று முபசாரத்தா லவாய நிலையன வென்றுமாம்.
இங்ஙனம் யொருள்கள் அவாயநிலையன; ஒன்றற்கொன் றந்வயு யோக்கிய முடையனவுமாம். அது வழியாற் பதங்களு மவாயநிலையன யோக்கிய முடைய வென்று பசரிக்கப்படும். அண்மை பதங்க ளொருவனுனே விளம்பமின்றி உச்சரிக்கப் படுதல். அதுவுஞ் சாட்சாதே பதங்களினுண்டு; பொருள் வழியா னன்று. ஆதலின் இப்பொரு ளுண்டாயிற்று. பொருள் கூறும் வழியாற் கேட்பானுக்குப் பத வேறுபாட்டு விடைய அவாயநிலையை யாயினும் பொருள் வேறுபாட்டு விடைய அவாய நிலையை- யாயினுந் தோற்றுவிக்கின்ற, விளங்கும் ஒன்றற் கொன் அன்வயமான யோக்கியப் பொருளைக் கூறுகின்ற அண்மை யுடைய பதங்களது கூட்டம் வாக்கியம்; பதமுமெழுத்துக் கூட்டம்[1] ஈண்டுக் கூட்ட மொரு ஞான விடையமாதல்.

---

1. பதம் "எழுத்துக்கூட்டம்" என்றுரேனும் சிறுபான்மை ஓரெழுத்தே பதமாதலு முளதென்றறிக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனம் அதின் முறையுடையவாகிய எழுத்துக்கட்கு விரையக் கெடுதல் உண்மையின் ஒருங்கே அனேக வெழுத் தநுபவ முண் டாகாமையின் முதன்முத லெழுத்துக்க ளை அநுபவித் தீற் றெழுத்துக் கேட்குங்கான் முதன்முதலெழுத் தநுபவத்தாற் பிறந்த வாசனையோடு கூடிய ஈற்றெழுத்தோடு பொருந்திய பதத்திற் கமைந்த பொருட்சங்கேதங் கிரகித்தலால் அளிக்கப்பட்ட செவிப்புலனால் ஒருங்கே சதசத்தான பலவெழுத்தை யகப்படுக்கும் பதஉணர்வு தோன்றுந் துணை வலியால் பிரத்யபிஞானம் போலப் பிரத்யபிஞானக்-காட்சியில் அதீதமாயு முன்னரவத்தை தோன்றுமே. அன்றே பின்னர் முதன்முதற்பதாநுபவத்தாற் றோன்றிய வாசனையோடு கூடிய பதப்பொருண் ஞானத்தால் அளிக்கப்பட்டு ஈற்றுப்பதவிடையச் செவிப்புலனாற் சதசத்தான பல பதத்தை அகப்படுக்கும் வாக்கிய ஞானமுண்டாம். இவ் வாக்கியம் ஆப்தமகனாற் கூறப்பட்டுச சப்தப் பிரமாணமாம். அதற்குப் பலம் வாக்கியப் பொருளுணர்வு. இச்சத்தப் பிரமான லக்கணம் உலகிலும் வேதத்திலும் பொது. உலகத்தின் இது விசேடம். யாவனுயினுமொருவ னுத்தனுவான்; அனைவருமல்லர். ஆதலின் உலக வாக்கியஞ் சிறிதே பிரமாணம். ஆப்தனைக் கருத்தா வாகவுடைய வேதத்திற் பரமாப்தனை சிறிமகேசனாற் கூறப்பட்ட வாக்கியமெல்லாம் பிரமாணம்; எல்லாம் ஆப்தவாக்கியமாதலின்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு பிரமாணமும் வர்ணிக்கப்பட்டன. இவற்றின் வேருயின பிரமாணமல்ல; பிரமாணமாயினும் ஈண்டே யடங்குதலின்.

## அருத்தாபத்தி:-

அற்ருயின், அருத்தா பத்தியும் வேறு பிரமாண-மாக வுண்டு, அங்ஙனமன்றே, ப்ரியனை தேவதத்தன் பகலுண்ணுனென்று கண்டாயினுங் கேட்டாயினு மிரவுண்டல் கற்பிக்கப்படும், பக லுண்ணுனது பருமை யிரவுண்ட லன்றிக் கூடாது. ஆதலின் பருமை வேறேன்று லாகாமை தோற்றுவித்த அருத்தா பத்தியே இரவுண்டலிற் பிரமா-ணம், அது காட்சி முதலியவற்றின் வேறு, இரவுண்டல் காட்சி முதலியவற்றிற்கு விடைய மாகாமையின்: இங்ஙனமன்று; இரவுண்டல் அநுமான விடையமாதலின். அங்ஙனமன்றே, தேவதத்தன் இரவிலுண்பன், பகலுண்ணு-ணுயினும் பரியனுதலின், யாவனொருவனிரவிலுண்ணுனவன் பகலுண்ணுயும் பரியனுகான், எங்ஙனம்? பகலிரவி-லுண்ணுன் பரியனுகான், இவன் அங்ஙனமல்லன், ஆதலின் அங்ஙனமல்லன், என்றுங் கேவலவியதிரேகி அநுமானத்தால் இரவுண்ட றேன்றலில், அருத்தாபத்தி கற்பனையாற் பயனென்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபாவம் :--

அற்றுயின்; அபாவமென்பதும் வேறு பிரமாணமாயுண்டு; அதுவும், இன்மை கவர்தற் பொருட்டு வேண்டப்படும், அங்ஙனமன்றே, குட முதலியவற்றினை அநுபலத்தியாற் குட முதலியவற்றின் அபாவம் துணியப்படும், - அநுபலத்தி உப லத்தி யின்மை யென்றது - அபாவப் பிரமாணத்தாற் குட முதலியவற் றின்மை கிரகிக்கப்படும்; இங்ஙன மன்று; ஈண்டுக் குடமுண்டாயின்; அப்போது நிலம்போலக் காணப் படும்; குடங் காணப்படாதிருப்பதே, அதனுற் காட்சியின்மையின் இல்லை யென்றுந் தருக்கத்துணையுடைய தோன்றுமையோடு கூடிய காட்சியானே, அபாவங் கிரகிக்கப்படுதலின்.

அற்றுயின், இந்திரியங்கள் தம்மோடு சம்பந்தப் பொருள் கிரகிப்பன - அங்ஙனமன்றே; இந்திரியங்கள் வஸ்துவை அடைந்து விளக்கும்; ஞானகரணமாதலின்; ஆலோகம் ( பார்வை ) போல - இங்ஙனமாயிருந் கண் செவிகள் வஸ்துவை அடைந்து விளக்கும்; புற விந்திரிய மாதலின்; மெய் முதலிய போல - மெய் முதலிய அடைந்து காரியப்படுதல் உபயவாதிசித்தமே - இந்திரிய அபாவங்கட்கு சம்பந்தமே யில்லை, சம்பந்தங்கள் சையோக சம வாயமே யன்றே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை, அவற்றிற் கில்லை; விசேடண விசேடிய பாவஞ் சம்பந்தமே யன்று; வேறுதல். இரு பொருட் கணிற்றல், ஒன்றுதலின்மையின்—சம்பந்தஞ் சம்பந்திகளில் வேறுதலும் உபய சம்பந்திகளிலடைதலு மொன்றுதலு முடையதன்றோ? எங்ஙனம்? முரசு குணிற் சையோகம்—அது முரசுகுணில்களில் வேறுதலு மவற்றை யடைதலு மொன்றுதலுமாம்— விசேடண விசேடிய பாவ மங்ஙனமன்று; அங்ஙனமன்றே, தண்ட புருடருடைய விசேடண விசேடிய பாவம் அவற்றின் வேறன்று; தண்டத்திற்கு விசேடணத்துவம் வேறு பொருளன்று; மன்றென்னெனிற் சொரூபமே—அபாவமும் விசேடணமாதலின் திரவிய முதலியவற்றின் வேறான ஒரு பொருள் அபாவத்திற் சம்பவமாகாது—ஆதலின் அபாவத்திற்குப் தன்னையுடையதென்றும் புத்தியைத் தோற்றுவிப்பதான சொரூபம் யாதது வே விசேடணத்துவம்; அது வேறு பொருளன்று—இங்ஙனம், வியாபகத்துவ காரணத்துவ முதலியன ஊகிக்கத்தக்கன— தன்றோடு கூடிய தென்றும் புத்தியைத் தோற்றுவிப்பதான சொரூபம் யாதது தீ முதலியவற்றிற்கு வியாபகத்துவம்; நூல் முதலியவற்றிற்குக் காரணத்துவமுங் காரியத்தாற் றொடரப்பட்ட அன்றுவய வியதிரேகி சொரூபமே; வேறு பொருளன்று; அபாவமும் வியாபகமாதலின் காரணமு—மாதலின்—அபாவத்திற் சாமானிய முதலியன சம்பவமாகா—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனம் விசேடண விசேடிய பாவம் விசேடண விசேடிய ரூபத்தினின்று வேறன்று; இரு பொருட் கணிற்பதுமன்று; விசேடணத்தில் விசேடணபாவ மாத்திரமுண்மையின் விசேடியபாவமின்மையின். ஒன்று மன்று; விசேடணத்தினது பாவமுமென, உம்மைத் தொகை யீற்றி னின்ற பாவமென்னுஞ் சொல் வேறு வேறு புணரும்– இவை இரண்டு, சம்பந்தம் ஒன்று; ஆதலின் விசேடண விசேடிய பாவஞ் சம்பந்தமன்று– இங்ஙனம் வியாப்பிய வியாபக பாவ முதலியவும்–சம்பந்தம் என்றுந் சொற் பிரயோக மிரண்டாற் கூறப்படுதல் ஒப்புமையால், உபசாரமாதலின்–ஆதலிற் சம்பந்தமில்லாத அபாவந்திற் கிந்திரியத்தாற் கிரகித்தலுண்டாகாது; அஃதொக்கும்; வியாந்தி பாவத்தோடு கூடியதாகலின். பாவத்தை விளக்கு மிந்திரிய மடைந்தே விளக்கும்; அபாவமன்று. பாவத்தை விளக்கு மிந்திரியம் விசேடண விசேடிய முகத்தானே யென்பது சித்தாந்தம். சம்பந்தமில்லாத அபாவங் கிரகித்தலில் அதிப்பிரசங்கதோஷம் விசேடணத்துவத்தானே விலக்கப்படும். கரமதத்திறமொக்கும். (காட்சியினுல் அபாவத்தை கிரகிக்கமுடியும் என்பதனுல் அபாவம் தனியொரு பிரமாணமாகாதென்பது சைவசித்தாந்தக் கருத்தாகும். அபாவம் என்பது இன்மை எனும் பொருள் தரும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.5 பிராமாண்யம் (அறிவே பிரமாணமாதல்)

இஃதிப்போது கூறப்படும்—புனன் முதலிய ஞானம் தோன்றுகையில் அந்த ஞானத்தினது பிராமாண்யம் துணித்த தொருவன் புனன் முதலியவற்றிற் செல்லா நின்றுன்; ஒருவன் ஐயத்தானே சென்றுன், சென்ற பிற் காலத்துப் புனன் முதலியவற்றை யடைந்தபோது பிராமாண்யந் துணிகின்றுன்— இது வஸ்து கதி. இதில் ஒருவன் கூறினன்: முன்னரே பிராமாண்யந் துணிந்து மகன் செல்கின்றுன்; தன்னுலே பிராமாண்யந் துணியப் படுதலின். இதன் பொருள்: எதனுனே ஞானம் கிரசிக்கப்படும், அதனுனே யதனை யடைந்த பிராமாண்யமும்; ஞான தருமமாகிய பிராமாண்யங் கிரகிப்பது ஞானம் கிரகிப்பதன் வேறன்று. ஆதலின் ஞானத்தை யடைந்த பிராமாண்யத்திற்குத் தன்னுற் துணிதல் ஞானம் கிரகிப்பதன் வேறு வேண்டாமையே. ஞானமும் செல்வதற்கு முன்னமே கிரகிக்கப்படும். வேருயின், பிராமாண்ய அப்பிராமாண்ய ஐயமும் எங்ஙனமுண்டாம்? ஆதலின் செல்வதற்கு முன்னமே ஞாததை (ஞானமாகிய அதை) வேறென்றுகத் தோன்றுமை தோற்றுவித்த அருத்தாபத்தியால் ஞானம் கிரகிக்கப்படுகையில், ஞானத்தையடைந்த பிராமாண்யமும் அருத்தாபத்தியானே கிரகிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர்ப் புருடன் செல்வான்; முதல் ஞானம் மாத்திரம் கிரகிக்கப்படும். பின்பு, சென்றதற்குப் பின் பலங் காண்டலால் ஞானத்திற்குப் பிராமாண்யம் துணியப்படும் என்பதன்று. இதிற் கூறுதும். ஞாதத்வம் (ஞானமாகிய தத்துவம்) வேறென்றுய்த் தோன்மை தோற்றுவித்த அருத்தாபத்தியால் ஞானம் கிரகிக்கப்படுமென்று அறியாது கூறப்படும், அதுவே யுடம்பாட்டதன்று. அதனுற் பிரமாண்யங் கிரகித்தல் செய்மைக் கண்ணே நீங்கும். அங்ஙனமன்றே, பரனுடைய அபிமத (விருப்பம் ) மிதன்றே? குட முதலிய விடைய ஞானம் தோன்றுழி என்னலறியப்பட்டது. இக்குடம் என்று குடத்திற்கு ஞாதத்துவம் துணியப்படும். ஆதலின் ஞான முண்டாகையில் ஞாததையென்றொரு தருமம் பிறக்குமென்று அநுமிக்கப்படும். அதுவும் ஞானத்திற்கு முன் பிறவாமையின், ஞானம் பிறக்கையிற் பிறத்தலின், அன்வய வியதிரேகங்களால் ஞானத்தாற் பிறக்குமென்று துணியப்படும். இங்ஙனம் ஞானத்திற் பிறந்த இஞ்ஞாததை யென்பதொரு தருமமுண்டு. அதுவும் ஞானமல்லாமற் பொருந்தாது; காரணமன்றிக் காரியம் தோன்றாமையின். ஆதலின் அருத்தாபத்தியா லதன் காரண ஞானம் ஞாததையாற் துணியப்படுமென இது கூடாது; ஞான விடயதை இதின் வேறான ஞாததையிற் பிரமாணமின்மையின்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆதலின் அருத்தாபத்தியால் அதன் காரண ஞானம் ஞாதநையாற் றுணியப்படும். இது கூடாது; ஞான விடயத்திற்கு இதன் வேறான ஞாதநை பிரமாணம் அல்ல)

அற்றுயின், ஞானத்திற் பிறந்த ஞாதநை யாதாரத்துவமே யன்றிரு. குட முதலியவற்றிற்கு ஞான விடயத்துவம் அங்ஙனமன்றோ, தாதாத்மியத்தால் (ஒற்றுமையாய்க் கலந்து நிற்றலால்) விடையதையில் லை; குடஞானங்கட்குத் தாதாத்மிய மின்மையின் - அதனிற்றோன்றலால் விடையத்துவம் கூறில் இந்திரியங்கட்கு விடையத்துவம் வரும்; இந்திரியங்களானும் அந்த ஞானம் தோன்றுதலின். - ஆதலின் இது யூகிக்கப்படும். ஞானத்தாற் குடத்திலென்று பிறப்பிக்கப்படும். எதனுற் குடமே யந்த ஞானத்திற்கு விடையமாம்; வேறன்றென்று. - ஆதலின் விடையத்துவம் வேறென்றுத் தோன்றுமையானே ஞாதநை யறியப்படும் - சாட்சிமாத்திரையானேயன்று; இங்ஙனமன்று; பொருள் ஞானங்கட் சித்தன்மையவே யியற்கை விசேடம் வேறுயின் இறப்பெதிர்வுகட்கு விடையத்துவ மின்றுதல் வேண்டும். அவற்றில் ஞானத்தால் ஞாதநை தோன்றுதல் கூடாமையில் இல்லாத தருமியின் றருமந் தோன்றுதல் பொருந்தாமையின் இன்றும் ஞாதநையும் ஞான விடையமாதலின்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் கண்ணும் வேறு ஞாததை வரல் வேண்டும். அங்ஙன-
மாயின் அனவத்தை. ஆயின் வேறு ஞாததை யின்றியும் இயற்கையானே
ஞாததைக்கு விடையத்துவமென்னிற் குடமுதலியவற்று ஞாததை-
யாலென ஞாததை யுண்டாகும். ஆயினும் அதனானே ஞானம்
அறியப்படும். பிரமாண்யங் கிரகிக்கப்படாது. பிரமாண
ஞானம் நீங்காத ஞாததை விசேடத்தால் பிரமாண்யங்
கிரகிக்கப்படும். பிரமாண்யத்திற்கு ஞானம் கிரபிப்பதானே
கிரகிக்கப்படுதல் யாண்டையது? ஆயின் பிரமாண ஞானம்
நீங்காத ஒரு ஞாததை விசேடத்தால் ஞானப் பிராமாண்யங்கள்
கூடவே கிரகிக்கப்படும்.

இங்ஙனமாயின் அப் பிராமாண்யத்திலும் இது கூறலாம்,
அப் பிரமாண ஞானம் நீங்காத ஒரு ஞாததை விசேடத்தால்
அப் பிராமாண்யங்கள் கூடவே கவரப்படுமென்று.
இங்ஙனமாயினும்
அப்பிராமாண்யம் பிறிதானே கிரகிக்கப்படும். ஞானங்
கிரகித்தலின் வேறென்பதிதன் பொருள் ஞானம் மானதக்
காட்சியானே கிரகிக்கப்படும்; பிராமாண்யம் அநுமானத்-
தால். அங்ஙனமன்றே புனன் ஞானத்திற்குப் பின் புனல்
வேண்டியான்று. செலவிரு வகை, பலமுடையதும் பலமில்ல-
தமென.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றன் யாது பயனேடு கூடிய நது பலமுடைச் செலவு. அதனுல் ஞானத்திற்கு மெய்மை யனுமிக்கப் படும். பிரயோகமும்: விவாதத்தாற் றழுவப்பட்ட புனன்ஞானம் பிரமாணம்; பயனுடைச் செலவு தோற்றுவித்தலான். யாது பிரமாண மன்றது பயனுடைச் செலவைத் தோற்று-வியாது; எங்ஙனம்! பிரமாணப் போலி. இது கேவலவியதிரேகி. இதிற் பயனுடைச் செலவைத் தோற்றுவிப்பதான புனன்ஞானம் யாதது பக்கம் அதனது பிராமாண்யஞ் சாத்தியம்; மெய்மையதாமென்று பொருள். பிரமாகரணத்துவமன்று: நினைவால் வியபிசாரம் (முறை பிறழ்ச்சி) வருதலின். ஏது சமர்த்தப் பிரவிருத்தி (முயற்சி) சனகம்-பயனுடைச் செலவைத் தோற்றுவித்த லென்று மளவு. இக் கேவல-வியதிரேகி யனுமானத்தால் அப்பியாசதசையி லுண்டான ஞானத்திற்கு பிராமாண்யந் துணிகையில் அது திட்டாந்தமாக செலவுக்கு முன்னருந் தன்சாதீயத்துவத்தால் (யோலி-யுத்தரத்தால்) அன்வயவியதிரேகி யனுமானத்தாற் பயின் றறியாத ஞானத்தினது பிராமாண்யம் அனுமிக்கப்படும். ஆதலிற் பிறிதானே பிராமாணயம். ஞானம் கிரகிப்ப-தானே, கிரகிக்கப்படுவதன்று. பிரமாணங்கள் கூறினும். பிரமேயங்கள் கூறுதும்.

## 2. பிரமேயம்

ஆன்மா, சரீரம், இந்திரியம், அருத்தம், புத்தி, மனம், பிரவிருத்தி, தோடம், பிரேத்தியபாவம், பலம், துக்கம், அபவருக்கம். பிரமேயம் என்பது சூத்திரம்

## 2.1 ஆன்மா

அவற்றுள், ஆன்மத்துவ சாமானியவான் ஆன்மா. அவருந் தேகேந்திரியங்களின் வேறுயினன்; சரீரங்கடோறும் பின்ன-மாயினன்; விபு (வியாபகமுடையது); நித்தியன்; மானதக் காட்சியான்; விபாதத்திற் புத்தியாதி குணலிங்க முடையான்; அங்ஙனமன்றே, புத்தியாதிகள் குணங்கள்; அனித்தியமாய்க் கொண்டோரிந்திரியத்தாற் கிரகிக்கப்படு-தலால்; ரூபம்போல, குணமும் குணியைப் பற்றியதே. அவற்றுள், புத்தியாதிகள் பூதங்கட்குக் குணமல்ல; மானதக் காட்சித் தன்மையால். யாவை பூதங்கட்குக் குணங்கள் அவை மனத்தாற் கிரகிக்கப்படா. எங்ஙனம்? உருவாதிகள் காலமனங்களுக்குக் குணங்களல்ல; விசேட குணமாதலின். யாவை திக்காதி குணங்கள், அவை விசேட குணமல்ல; எங்ஙனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கியை முதலிய அவை யெல்லாப் பொருள்கட்கும் பொதுக் குணங்கள். புத்தியாதிகள் விசேட குணங்களே; குணமாய்க் கொண்டோரிந்திரியத்தாற் கவரப்படுதலின். உருவம்போல. ஆதலின் இவ்வெட்டுத் திரவியங்களி லின்றும் வேருய்ப் புத்தியாதிகட்குச் குணி வேண்டத் தக்கது. அதுவே யான்மா. பிரயோகமும்: புத்தியாதிகள், பிரிதிவி யாதி யஉ்ட திரவியங்களின் வேறன திரவியத்தைப் பற்றுவன; பிரிதிவி யாதி யஉ்ட திரவியங்களைப் பற்றுமலூ் குணமாதலின்,

பிரிதிவி யாதி யஉ்ட திரவியங்களைப் பற்றுமற் குணமன்று.

இது கேவலவியதிரேகி. அன்றுவய வியதிரேகியாஒம் விளக்குப. எங்ஙனம்? புத்தியாதிகள் பிரிதிவி யாதி யஉ்ட திரவியங்களின் வேறு பொருளைப் பற்றுவன; பிரிதிவி யாதிகளைப் பற்றுமற் குணமாதலின். யாது எதைப் பற்றுமற் குணம், அது அதின் வேருயதைப் பற்றவுதாம். எங்ஙனம்? பிரிதிவி யாதியைப் பற்று ஒலி யிரிதிவியாதிக்கு வேறன வானைப் பற்றியதென்று. ஆதலின், இங்ஙனம் பிரிதிவி யாதி யஉ்ட திரவியங்களின் வேறுயொன்பதாம் பொருளான ஆன்மாச் சித்திக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரும் யாண்டுங் காரியந் தோன்றுதலின், விபு பரம மகற் பரிமான வா னென்ற பொருள். விபுத்துவத்தால் அவற்கு நித்திய அநுமானம்; வியோமம் போல. சுக முதலிய வேறுபாட்டா லுடம்புகடோறும் வேறுபாடுடையான். 1

## 2.2 சரீரம்

போகநிலம் உடம்பு. இன்ப துன்ப அநுபவம் போகம். அது எதனோடு கூடிய ஆன்மாவிற் றோன்றும் அது போகநிலம்; அதுவே சரீரம்.

ஓ

## 2.3 இந்திரியம்

உடம்போடு சையுத்தமாய ஞானகரணமான அதீந்திரிய மிந்திரியம்.

---

1. ஆன்மா அநாதிநித்தியன் அன்று, கடவுளாற் சிருட்டிக்கப் பட்டதாதலின் விபத்துவமுடையதுமன்று. விபுத்துவம் நித்தியத்தையநுமிப்பதுங் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதீந்திரிய மிந்திரியம்" என்று கூறிற் காலாதியிற மிந்தியத்துவம் வரல் வேண்டும். ஆதலில் "ஞானகரண-மான" என்று கூறப்பட்டது. அங்ஙனமாயினும் பொரு ளிந்திரிய சன்நிகர்ஷ முதலியவற்றிரும், இந்திரியத்துவம் வரல் வேண்டும். ஆதலின் "உடம்போடு சையுத்தமாய" என்று கூறப்பட்டது. "உடம்பொடு சையுத்தமாய் ஞான கரணம்" என்று கூறில் ஆலோகத்திரும் (பார்வை), இந்திரியத்துவம் வரல் வேண்டும். ஆதலில் அதீந்திரியம் என்று கூறப்பட்டது.

2.3.1 ஆக்கிராணம் (மூக்கு) 2.3.4 துவக்கு (தோல்)
2.3.2 இரசனம் (நாக்கு) 2.3.5 சுரோத்திரம் (காது)
2.3.3 சட்சு (கண்) 2.3.6. மனம்

அவ்விந்திரியங்களும் ஆறு: கிராணம், இரசனம், சட்சு, துவக்கு, சுரோத்திரம், மனம் என்பனவே. அவற்றுள், கந்தந் தோன்றுதற் சாதன இந்திரியங் கிராணம்; மூக்கு நுனியிலிருப்பது. அதுவும் பிரிதிவி மயம். கந்த-முடைமையின்; கந்தமுடைமையுங் கந்தங் கவர்வதால். எவ்விந்திரியம், உருவாதி யைந்திருள் எக்குணத்தைக் கவரும், அவ்விந்திரியம் அக்குணத்தோடு கூடியது. எங்ங-னம், சட்சு ரூபங் கவர்வது; உருவத்தையுடையது; அது போலக் கிராணங் கந்தத்தைக் கவர்வது அதனல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தத்தையுடையதுமாம். இரசத் தோற்ற சாதன இந்தி-
ரியம் இரசனம்; நாஞனியிலிருப்பது; அதுவும் அப்புமயம்;
ரூபாதி யைந்திர விரதத்துக்கே யபிவியஞ்சகமாதலில்;
வாய் நீர் போல. ரூபத் தோற்ற சாதன இந்திரியஞ்
சட்சு; கண்மணிநுனியி லிருப்பது; அதுவும் தேயுமயம்.
ரூபாதி யைந்திரள் ரூபத்திற்கே யபிவியஞ்சகமாதலில்;
விளக்குப்போல. பரிசந்தோற்ற சாதன இந்திரியந் துவக்கு;
உடம்பெலாம் வியாபி. அதுவும் வாயுமயம்; ரூபாதி
ஐந்திரட் பரிசத்திற்கே யபிவியஞ்சக மாதலின்; சரீர
வியர்வத் தன்மை யப்வியஞ்சகமான விசிறிக் காற்றுப்போல.
சத்தத்தோற்ற சாதன இந்திரியஞ் சுரோந்திரம். அது
செவியோடு கூடிய ஆகாயமே. வேறு பொருளன்று; சந்த
குணத்துவத்தால். அதுவுஞ் சத்தங் கிரகித்தலின். எவ்விந்-
திரியம் ரூபாதியைந்திரள், எக்குணத்தைக் கவர்வது, அது,
அக் குணத்தோடு கூடியது. எங்ஙனம்? சட்சு முதலிய-
வைகள், சத்தம் கிரகிப்பது சுரோத்திரம் ஆதலின்,
அது சத்த குணமுடையது. அற்றுயின் சட்சு முதலிய இந்திரிய
முன்மையின் யாது பிரமாணம்? கூறுதும்; அநுமானம்.
ரூபாதி ஞானங்கள், கரண சாத்தியங்கள்; கிரியையாதலின்;
துணித்தற் கிரியை போல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.4 அருத்தம்

அருத்தங்கள், ஆறு பதார்த்தங்கள்; அவை திரவியம், குணம், கருமம், சாமானியம் (பொதுமை), விசேடம், சமவாய மென்பனவே

பிரமாண முதலியன ஈண்டே யடங்குவனவாயினும் பயன்படல் வசத்தாற் பேதமாகக் கூறப்படும்.

### 2.4.1 திரவியம்

அவற்றுள் சமவாயி காரணந் திரவியம் அத் திரவியங்களும் பிரிதிவி(நிலம்), அப்பு(நீர்), தேயு (நெருப்பு), வாயு, ஆகாயம், காலம், திக்கு(திசை), ஆன்மா, மனம், ஒன்பதே.

#### 2.4.1.1. பிரிதிவி:-

அவற்றுட் பிரிதிவித்துவ சாமானியமுடையது பிரி- திவி. வன்மை, மென்மை முதலிய அவையவசையோக விசேடத்தோடு கூடியது; கிராணம், உடம்பு, மட்- பிண்டம், கல், மர முதலிய உருவமுடையது. கந்தம்; ரூபம், இரதம், பரிசம், சங்கியை(எண்), பரிமாணம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுதல், கூடல், பிரிதல், அண்மை, சேய்மை, குருத்துவம் (திண்மை), திரவத்துவம் (நெகிழ்சி), சம்ஸ்காரமுடையது.

அதுவும் நித்த அனித்த பேதத்தால் இருவகை; பரமாணு (நுண்ணிய அணு) ரூபம் நித்தியம்; காரியரூபம் அனித்தியம். பிரிதிவியியிறுடையரூப ரச கந்த பரிசங்கள் அனித்தியங்கள், யாகத்தாற் றோன்றின; பாகந் தேயு சையோகம் ஆதலிற் பிரிதிவியினது முன்னர் ரூய முதலியன கெடும். மற்றையன பிறக்குமென்பது பாகத்தாற் றோன்றுவன.

## 2.4.1.2. அப்பு:-

அப்புத் தன்மைச் சாமானியமோடு கூடியது அப்பு. இரசன இந்திரியம். ஆறு, கடல், பனி, ஆவி முதலிய உருவமுடையது; கந்தமின்றிச் சிநேதமோடு கூடிய முன் சொன்ன குணமுடையது; நித்த அனித்தமுமாம். நித்தம் பரமாணு ரூபம்; அனித்தங் காரியரூபம். நித்தியங்களுடைய ரூபாதி, நித்தியங்கள்.

## 2.4.1.3 தேயு:-

தேயுத்தன்மைச் சாமானியமுடையது தேயு. ஞாயிறு, பொன், தீ, மின் முதலிய வேறுபாடுடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபம், பரிசம், சங்கியை, பரிமாணம், பிரதக்த்வம், சையோகம், விபாகம், பரத்துவம் (முன்மை), அபரத்துவம் (பின்மை), திரவத்துவம் சம்ஸ்காரமுடையது. நித்த அனித்தமும் முன்போல. அது உற்பூத ரூப பரிசம், அநுற்பூதரூப பரிசம்; அநுற்பூதரூப உற்பூத பரிசம், உற்பூதரூப அநுற் பூத பரிச மென்று நால்வகை.

உற்பூதரூப பரிசம் எங்ஙனம்? பிண்டத்தேயுவான தீ முதலியன உற்பூத அபிபூத ரூப பரிசம். அநுற்பூத ரூபமென்னிற் கட்புலப்படாமை வேண்டும்; அநுற்பூத பரிசமென்னிற் யரிசத்தாற் கிரகிக்கப்படாமை வேண்டும். அபிபவம் வலியதாகிய தன் சாதியான பிரிதிவி சம்பந்தப் பரிசத்தாற் பண்ணப்படுமே. அநுற்பூத ரூப பரிசத் தேயு எங்ஙனம்? சட் சிந்திரியம், அநுற்பூதரூப உற்பூத பரிசம் எங்ஙனம்? வெந்நீரிற் தேயு. உற்பூத ரூப அநுற்பூத பரிசம் எங்ஙனம்? விளக்கின் ஒளி மண்டலம்.

2.4.1.4 வாயு:- வாயுத்துவ சம்பந்தமுடையது வாயு துவக்கிந்திரியம், பிராணன், காற்று முதலிய பேதமுடையது; பரிசம், சங்கியை, பரிமாணம், பிரதக்த்துவம் (வேறுதல்), சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம் விரைவுடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவும் பரிசத்தால் அமேயம். அங்ஙனமன்றே, வாயு வீசுகையில் வெம்மை தன்மையில்லாத பரிசம் யாதொன்று தோன்றுநின்றது அது குணமாதலிற் குணியை அநுமானிக்கும். குணியும் வாயுவே; பிறதில் தோன்றுமையின், பிரிதிவி வாயு வல்லதற்கு வெம்மை தன்மையில்லாத பரிசமின்மையின். அதுவும் நித்த அனித்த பேதத்தால் இருவகை, நித்தியம் பரமாணுரூப வாயு; அனித்தியங் காரியரூபவாயு$_1$.

---

பிரிதிவி யாதிய திரவியங்க ளன்கும் நித்தியமென்ற பரமாணுக்களிலே பீடிகையிடும். நமதாசிரியன் மண்ணின்றிக் குடம் வனையுஞ் சக்தி குலாலனுக் கின்றே யென்ற நரசிருத்திய முறை கண்டு, அம் முறையைச் சர்வ சாமர்த்திய கடவுளிலும் ஆவாகித்தார் போலும். கடவுள், சூரியோபாதானமாய்ச் சிருட்டி செய்ய வல்லவரேயெனின், பரமாணு நித்தியஞ் சாதிக்க வேண்டியதில்லை.

உலகின் கண்ணே எப்பொருள்களும் உபகார கருவிகளாய் நிகழக் காண்டலாற், காரியரூபமாகிய பிரிதிவியாதியவற்றின் அமைக்கப்பட்ட உபகார கரணத்தின் சத்தி காரணரூபமாகிய பரமாணுப் பிரிதிவியாதியவற்றின் அமைந்ததென்று கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றமும் அழிவும் :-

அவற்றுள் காரியமான பிரிதிவி யாதி நான்கிற்கு முற்பத்தி நாச முறையே கூறுதும். இரண்டு பரமாணுக்-களது வினையாற் சையோக முண்டாகையிற்று வியணுகந் தோன்றும். அதற்குப் பரமாணுக்கள் சமவாயி காரணம்;

---

ஆதலின் சங்கற்பரூபமாகிய பரமாணு சங்கற்பிக்கும் ஒரு கருத்தனை உடைத்தாக வேண்டும். அச்சங்கற்ப-கர்த்தா, சங்கற்ப விடயத்தின் முன் உளனுகவேண்டும். ஆதலால் பரமாணு அனுதி நித்திய மென்பது யுத்தி விரோத மென்றறிக.

பரமாணுவிடத்துச். சங்கற்பசத்திகள் இல்லை, சர்வ சாமர்த்திய கர்த்தாவே வருவித்தா ரென்னின்; பரமாணுவின் இல்லாத சங்கற்ப சத்தியை உபாதானமின்றிச் சமைத்த சாமர்த்தியம் பரமாணுவையு மெளிதிற் சமைக்குமன்றோ, அற்றேற் பரமாணு நித்தியமென்று வரு-விப்பதேன் என்றயத்துணர்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றது சையோக மசமவாயி காரணம்; அதிட்டாதி நிமித்த காரணம். துவியணுக்களாற விளையாற் சையோக முண்டாகையிற் றிரியணு தோன்றும். அதற்குத் துவி-யணு க்கள் சமவாயிகாரணம்; ஒழிந்தன முன்போல இங்ஙனம் திரியணுக் களாற் சதுரணுகம், சதுரணுகங்களா லபரதூ லம், அவற்றாற் றூ லதரம், தூ லதரங்களாற் றூ லதமம். இங்ஙன முறையான் மகாப் பிரிதிவி, மகா அப்பு, மகாதேயு, மகாவாயு தோன்றும். காரியத்தை யடைந்த ரூபாதிகள் தங்கட் கிடமான சமவாயி காரணத்தை யடைந்த ரூபாதிகளாற் றோன்றும்; காரண குணங்கள் காரிய குணங்களைத் தோற்று-விக்குமென்ற நியாயத்தால். இங்ஙனந் தோன்றிய ரூப முதலியவுடைய காரியத் திரவியமாகிய குட முதலியவற்றிற் கவையமான கபால மாலதியிற் றள்ளுதலானுயிரும், புடைத்த-லானுயிரும் வினை தோன்றும். அதனால் விபாகம். அதனால் அவையவியைத் தோற்றுவிப்பதான அசமவாயிகாரணமான சையோகத்திற்கு நாசம் பண்ணப்படும். அதனாற் காரியத் திரவியமான அவையவியான குட முதலியவற்றிற்கு நாசம். இங்ஙன மசமவாயிகாரண நாசத்தாற் திரவியநாசம் எங்ஙனம்? முற்கூறிய பிரிதிவியாதிகளுக்குச் சங்காரத்திற் சங்கரிக்க வேண்டி மகேசரடைய சங்கரித்தல் வேட்கையால், அணுக்களில் வினை, அதனால் வியாயகம், வியாபகத்தாற் சையோக நாசம்; துவியணு கெடுகையில் ஆசிரயக்கேட்டாற்றிரிய-ணுகாதி நாசம்: முறையே பிரிதிவியாதி நாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்ஙனம்? நூற்கேட்டின் ஆடை கெட்டு அதனை யடைந்த ரூபாதிகளுக்குத் தனதாசிரயக் கேட்டானே கேடு. வேறுயின் ஆசிரயமிருக்கையிலே மாறுபட்ட குண மடைதலாற் கேடு; எங்ஙனம்? பாகத்தாற் குட முதலியன ரூபாதி நாசமென்க.

பரமாணு சற்பாவத்துக்குப்[1] பிரமாணம் யாது? கூறுதும். சாளர வெயிற் கண்ணதாகிய எல்லா வற்றிநு நுண்ணிய தியாதென்று தோன்றும், அது தன்னி நுண்ணியதாகிய பரிமாண திரவியத்தாற்றோன்றியது; காரியத் திரவிய மாதலில் குடம்போல. அத் திரவியமுங் காரியமே; பெருந்திரவியத்தைத் தோற்று-விப்பதற்குக் காரியத்துவ நியமத்தால். ஆதலின் இங்ஙனந் துவியணுக மென்றும் வேறு திரவியஞ் சித்தம். அதுவும் தன்னி நுண்ணியதாகிய சமவாயிகாரணத்திரவியத்-தாற் றோன்றும்; காரியத் திரவிய மாதலிற்; குடம் போல யாது துவியணுகத்தைத் தோற்றுவிப்பததுவே பரமாணு. அதுவுந் தோன்றுததே. அற்றுயின், காரியத்திரவியத்தைத் தோற்றுவிப்பதற்குத் காரியத்துவ நியமமாதலின்.

---

1. சற்பாவம்—உண்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது தோன்றாத தெங்ஙனம்? கூறுதும். எண்ணிறந்த காரிய பரம்பரை யளவளதா தோஉடம் வருதலின், இங்ஙனமாயிற், பல திரவியத்தாற் பிறத்தல் விசேடமின்மையின். மேருகடுகு-கட்குத் துல்லிய பரிமாணத்துவம் வருதலின், ஆதலிற்றோன்றாததே பரமாணு. துவியணுகம் இரண்டு பரமாணுக்களானே தோன்றும்; ஒன்றற்குத் தோற்றுவியாமை நியமமாதலின், மூன்று முதலிய கற்பனையிற் பிரமாணமின்மையின். திரிய-ணுக மூன்று துவியணுக்கங்களானே பிறக்கும்; ஒன்றற்குத் தோற்றுவியாமை நியமமாதலின் இரண்டாற் றோன்றிக் காரியத்தையடைந்த மகத்வந்தோன்றாமை வரல் வேண்டுதலின். காரியத்தின் மகத்துவங் காரணத்தின் மகத்துவத்தானுவது காரணப்பன்மையானுவ தன்றே? அவற்றுள் முதலதின்மையின் ஈற்றது வேண்டத்தக்கது; நான்கு முதலிய கற்பனையிற் பிர-மாணமின்மையின்; மூன்றனே மகத்துவந் தோன்றுதல் கூடுதலின்.

2.4.1.5 ஆகாயம்:-

சத்த குணமுடைய தாகாயம். சங்கியை, பரிமாணம், பிரதக்த்வம், சையோகம், வியாபகமுடையது; ஏகம்; விபு; நித்தியம்; சத்தலிங்கமுடையது. அதற்குச் சத்த லிங்க மெங்ஙனம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிசேடத்தால்; அங்ஙனமன்றே, சத்தங் குணங்; சாமானியமுடையதாய் நம்மனோர் புறவிந்திரியமொன்றாற் கிரகிக்கப்படுதலின்; ரூபாதி போல. குணமுங் குணியைப் பற்றியதே. அதற்குப் பிரிதிவியாதி நான்கு மான மாவுங் குணியாகத்தகா; சத்தஞ் செவியாற் கிரகிக்கப் படுதலின்.. யாவை, பிரிதிவியாதிகுணங்கள். அவை சுரோத்திரேந்திரியத்தாற் கிரகிப்பன அல்ல? எங்ஙனம்? ரூபாதிகள் சத்தஞ் சுரோத்திரேந்திரியத்-தாற் கிரகிக்கப்படும். திக்கு கால மனங்களது குணமன்று; விசேட குணமாதலின். ஆதலின் இவ்வெட்டி-னின்றும் வேறாகச் சத்தத்திற்குக்குணி யநுமிக்கப்படும். அதுவே ஆகாயம். அதுவும் ஒன்று; பேதத்திற் பிரமாண மின்மையின், ஒருமையாற் கூறுதலின், ஒருமையாதலின். ஆகாயத்துவ மென்றுஞ் சாமானியம் ஆகாயத்திலில்லை; சாமானியம் பலவிடத்திருத்தலின். ஆகாயம் விபு-பரம மகற் பரிமாண முடையதென்ற பொருள்; எல்லாவிடத்துங் காரியந் தோன்றுதலின் விபுத்துவத்தா னித்தியம் 1

---

1. சத்தகுணத்திறற் றார்க்கீகர் ஆகாயதிரவியஞ் சாதிப்பர். இது மித்தியா ஞானம். பூமியின் எவ்விடத்துஞ் செறிந்திருக்-கின்ற வாயுவே சத்தத்தின் உபகார மத்தியதாரி. சத்த முற்பத்தியான இடத்தே யதனிடத் தருகமைந்த வாயுவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.4.1.6 காலம்:-

காலத் திக்கின் வேறான பரத்துவா பரத்துவத்தால் அநுமேயம். சங்கியை, பரிமாணம், பிரதக்த்வம், சையோகம், வியாபகமுடையது; நித்தியம்; விபு. அதற்குத் திக்கின் வேறான பரத்துவா பரத்துவத்தால் அநுமேயத்துவம் எங்ஙனம்? கூறுதும். அணியனு யன்மையா லபரத்துவத்திற் சேயனுய்ச் சேய்மையாற் பரத்துவத்திற் கருகனுன இளையோன்கண் வேறான அபரத்துவந் தோன்றும். இதிற் திக்கின் வேறான யரத்துவமும் அபரத்துவமும் காரியமாய்த் திக்கு முதலிய காரண முண்டாகாமையிற் காலமே காரணமென் றநுமிக்கப்படும். அது ஒன்றுயிநும் நிகழ் விறப்பெதிர்வு விளை யுபாதி வசத்தான் நிகழ்வ முதலிய

---

லணுக்களைச் சலிப்ப, அவை தம்மய லணுக்களைச் சலிப்ப, இவ்வாறே கேட்பவனது செவித்துளையுள்ள வாயுவின் கூறுகள் சலிக்கப்பட அச்சலனமே காரணமாகச் சத்தம் பிறக்கின்றது. இதனை யுய்த்தறியாதார் ஆகாயப்பூ, என்பார் போல, ஆகாயமே சத்தத்தின் உபசார கருவி யென்றார். வாயுகாரி யந்திரத்தின் கண்ணே வாயுவைத் [illegible] போது அங்ஙன் அசைக்கப்படும் மணியினின்று சத்தம் பிறவாமையிதற்குச் சான்றாத லறிக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியபதேசத்தை[1] யடையும்; புருடனைப்போல; அவற்கடுதன் முதலிய வினையுபாதி வசத்தான் வியவதேச மடையும். இதற்கு நித்திய விபுத்துவங்கள் முன்போல.

---

பிரிதிவியப்புக்களும் சிறுபான்மை சத்தவாசினிகளாதலுள. பாரிசேடத்தால் ஆகாயத்திற்குத் திரவியத்துவங் கூறப் புகுந்த நம தாசிரியர் தகுந்த ஆராச்சியின்றி யாவை பிரிதிவியாதி குணங்கள் அவை சுரோத்திரேந்திரியத்தால் கவர்வ அல்ல என்றும் போலி வாக்கியத்திலே பீடிகையிட்டனர்.

1. வியபதேசம்—பெயர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.4.1.7 திக்கு:-

திக்கு ஒன்று; நித்தியம்; விபு; சங்கியை, பரிமாணம், பிரதக்த்வம், சையோகம், வியாபகமுடையது. அதுவுங், கிழக்கு முதலிய ஞானங்களால் அநுமேயம்; அவற்றிற்கு வேறு நிமித்தமின்மையின். கிழக்கும் மேற்கும் பொரு ளான்டேயிருத்தலின். அது ஒன்றுயினும் தன் றன் றேச சையோக வுபாதி வசத்தாற் கிழக்கு முதலிய பெயர்களை யடையும்.

2.4.1.8 ஆன்மா:-

ஆன்மத்துவ சாமானிய முடைய தான்மா. சுகதுக்க வேறுபாட்டாற் பலவே. அதுவுங் கூறினும். அதற்குக் குணங்கள், சங்கியை முதலிய ஐந்தும் புத்தி முதலிய ஒன்பதும். அதற்கு நித்தியத்துவ விபுத்துவங்கண் முன் போல.

2.4.1.9 மனம்:-

மனத்துவ சாமானிய முடையது மனம். அணுபரிமாண சையோகி. அகவிந்திரியம் மனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்ப முதலிய உபலத்திக்குக் (புலப்படுதலிற்குக்) கரணம். சங்கியை முதலிய ஐந்து குணமுடையது. பரத்துவம், அபரத்துவம், வேகமுடையது. இந்த மன சையோகத்தாற் புறவிந்திரியம் புறப்பொருள் கிரகிப்பது. அதனுனேயெல்லா உபலத்திக்குஞ் சாதனம். அதுவுங் காட்சியன்று; மற்றென்னெனின் அனுமானத்தாற் றோன்றுவது. அங்ஙன மன்றோ, இன்ப முதலிய உபலத்திகள் கட்புல முதலிய அல்லாக் கரணத்தாற் சாதிப்பன, கட்புல முதலிய இன்றியுந் தோன்றலின், யாது கரணம் அது மனம்[1] அதுவும் அணு பரிமாணம்.

திரவியங்கள் ஏறினும்[2]; குணங்கள் கூறுதும்.

---

1. மனம் திரவியமன்று, ஆன்மாவே தொழின்முறை நோக்கி மனம் எனப்படும்.
2. காலந் திக் கென்பன திரவியங்களல்ல. உலக மென்றெம்மாற் கொள்ளப்படுவதில், வஸ்து யாதொன்று மில்லதேல், உள்ளது திக்கே. அது பொருள்களிருறை விடம்.

•

ஒரு திரவியத்தாற் கூறுவப்பட்ட இடத்தை யக்கணத்தே யதுவு மங்குளதாக மற்றொரு திரவியங் கதுவவ-லாது. இவ்வேலாமை திரவியலக்கணம். திக்கிடத்-தோ, பிரிதிவி யாதி திரவியங்கள் கிடக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.4.2 குணம்

சாமானியமுடையது. சமவாயிகாரணமல்லது. விளையல்லது, குணம். அதுவும் பொருளைப் பற்றியது;

ரூபம், ரசம், கந்தம், பரிசம், சங்கியை, பரிமாணம், பிரதக்த்வம், சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், குருத்துவம், திரவத்துவம், சிநேகம், சத்தம், புத்தி, சுகம், துக்கம், இச்சை, துவேஷம், பிரயத்நம், தரும்ம், அதரும், சம்ஸ்காரம் என்னும் பேதத்தாலிருபத்து நான்கு குணமாம்.

---

ஆதலால் திக்கு திரவிய மற்றென்று கொள்க.

திரவியத்தின் தன்மை நிகழ்ச்சி நிட(இட) லாதிய-வற்றைக் குறித்துக் காலங் கூறப்படு மன்றிக் காலமென் றொரு திரவிய முளதன்றென்க.

காலந் திக்கென்பன பொருள்களின் அவஸ்தைகளைக் குறிக்கும் பெயர்களெனக் கொள்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.4.2.1 உருவம்:-

அவற்றுட் கட்புல மாத்திரையாற் கிரகிப்பது ரூபம்; சாதியுடையது; விசேடகுணம்; பிரிதிவி முதலிய மூன்றன்க ணிருப்பது. அதுவும் வெண்மை முதலிய பல பிரகாரம்; பிரிதிவியிற் பாகசரூபம்; தேயுவில் அபாசுக வெண்மையொளி; அப்புவி லொளியில்லாத அபாசுக வெண்மை.

2.4.2.2 இரசம்:-

இரசம் இரசநேந்திரியத்தாற் கிரகிக்கப்படுவது; விசேடகுணம்; பிரிதிவி புனல் களி லிருப்பது. அவற்றுட் பிரிதிவியின் மதுர முதலிய அறுவகை பாகசமும்; அப்புவின் மதுரமெபாகசமும்-நித்தியாநித்தியமாம்; நித்தியம், பரமாணுவான அப்புவி லநித்தியங் காரியமான அப்புவிலென்க.

2.4.2.3 கந்தம்:-

கந்தங் கிராணத்தாற் கவரும் குணம் பிரிதிவி மாத்திரையி னிருப்பது. அது நறுநாற்றந் தீநாற்ற மென இருவகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனன் முதலியவற்றிற் கந்தந் தோன்றல் செயுத்த சமவாயத்தா லென்றறியத் தக்கது.

2.4.2.4 பரிசம் :-

பரிசந், துவக்கிந்திரியத்தான் மாத்திரங் கிரகிக்கப் கூடுவது. பிரிதிவியாதி, தன்மை வெம்மை யில்ல (தண்மையுமல்ல, வெம்மையுமல்ல) தென்றும் பேதத்தான் மூவகை; தண்மை நீரில்; வெம்மை யில்லது பிருதிவி வாயுக்களில்; இவ்வுருவாதி நான்கும் மகத்துவத்தோ டொரு பொருளிற் சமவேதித்துக் கொண்டுற்பூதங்களாயே காட்சிகள்.

2.4.2.5 சங்கியை (எண்) :-

சங்கியை, ஒருமை முதலிய வியவகாரத்தின் காரணம் -சாமானிய குணம்- ஒன்று முதற் பரார்த்தமளவும். அவற்றுள் ஒருமை இருவகை; நித்த அனித்த பேதத்தான். நித்தியத்தை யடைந்தது நித்தியம். காரியத்தை யடைந்த நித்தியம். தன தாசிரைய சமவாயி காரணத்தை யடைந்த வொருமையாற் றோன்றுவது. இருமை யனித்தியமே. அதுவும், இரண்டு பிண்டங்களில் இஃதொான் றிஃதொான்றென்று மவாவுதற் கருத்தாற் றோன்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றுட், பிண்டங்கள் சமவாயி காரணம்-பிண்டங்களி லொருமைக ளசமவாயி காரணம்- ஃ [illegible] கருத்து நிமித்தகாரணம். அவாவுதற் கருத்து நாசத்தானே யிருமை நாசம். இங்ஙன மும்மை முதலிய தோற்றம்.

2.4.2.6 பரிமாணம்:-

பரிமாணம், அளவுவியவகாரத்தின் காரணம். அது அணு. மகத்து, நெடில், குறில் என நான்கு வகை. இன்னும் அது நித்த அனித்த பேதத்தா லிருவகை. நித்தியத்தை அடைந்தது நித்தியம். காரியத்தை யடைந்த தநித்தியம்; காரியத்தை யடைந்த பரிமாணங் காரணத்தையடைந்த சங்கியாயோனி, பரிமாணயோனி, பிரசயயோனி; அவை யெங்ஙனம்? துவியணுக பரிமாண மீஸ்வர னபேட்சா புத்தியிற் றோன்றிய பரமாணு இருமையாற் சனிக்கையாற் சங்கியாயோனி-சங்கியகாரண-மென்று பொருள். திரியணுக பரிமாணமுந், தன தாசிரய சமவாயிகாரணத்தை யடைந்த பன்மைச் சங்கியாயோனி. சதுரணுகாதி பரிமாணந்தன தாசிரைய சமவாயிகாரண பரிமாணத்தாற் றோன்றியது. பஞ்சித் திரட்சி யாரிமாணந் தனதாசிரைய சமவாயிகாரண அவையவங்களது பிரசிதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சையோகத்தாற் றோன்றியது. பரமாணு பரிமாணமு மாகா-
யாதியை யடைந்த பாரி மாண்டல்யமென்னும் பரமமகற்
பரிமாணமு நித்தியமே.

2.4.2.7 பிரதக்த்வம் (வேறுதல்):-

பிரதக்த்வம் வேறென்னும் வியவகாரத்தின் காரணம்.

2.4.2.8 சையோகம்:-

சையோகஞ் சையுந்த வியவகாரத்தி னேது-இரண்டன்
கண்ணது. அவ் வியாப்பிய விருத்தியது. அது வேறு வினை-
யாற் றோன்றியது. இரண்டன் வினையாற் றோன்றியது,
சையோகத்தாற் றோன்றியதென மூவகை. அவற்றுள்
வேறுவினையாற் றோன்றுவ தெங்ஙனம்? வினையுடைய
பருந்தோடு வினையில் குற்றிக்குச் சையோகம். அதற்குப்
பருந்தின் வினை யசமவாயி காரணம். இரண்டன் வினையாற்
றோன்றுவ தெங்ஙனம்? வினையுடைய மல்லரது சையோகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சையோகத்தாற் றோன்றுவ தெங்ஙனம்? காரண அகாரண சையோகத்தாற் காரிய அகாரிய சையோகம்.
எங்ஙனம்– கைத் தரு சையோகத்தான் மெய்த் தரு சையோகம்.

2.4.2.9 விபாகம்:-

விபாகம் பிரிவின் வியவகார ஏது. சையோக முதற்று யிரண்டன் கண்ணிருப்பது. அது வேறு வினையாற் றோன்றியது. இரண்டன் வினையாற் றோன்றியது. விபாகத்தாற் றோன்றியதென மூவகை. அவற்றுள் முதல தெங்ஙன்? மலையினின்று மெழும் பருந்தின் வினையாற் பருந்தொடு மலைக்கு விபாகம் (பிரிவு). இரண்டாவதெங்ஙன்? தகர்களது விபாகம். மூன்றுவதெங்ஙன்? கைத் தரு விபாகத்தான் மெய்த் தரு விபாகம்.

2.4.2.10 பரத்துவம் (முன்மை):-

2.4.2.11 அபரத்துவம் (பின்மை):-

பரத்துவா அபரத்துவங்கள், பர, அபர வியவகாரத்தின் காரணங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை திக்கால் வந்தனவும், காலத்தால் வந்தனவு மென இருவகைப்படும். அவற்றுட் திக்கான் வந்தவற்றது தோற்றங் கூறுதும்.

ஒரு திசையி லிருக்கும் பிண்டங்களில், இஃததனி னணித் தென்றும் புத்தியால் அநுக்கிரகிக்கப் பட்ட திக்குப் பிண்ட சையோகத்தா ல், அபரத்துவம் அணியதன் கட் டோன்றும்; சேய்மைப் புத்தியாற் பரத்துவஞ் சேயதன் கட்டோன்றும். பிண்டத்திரடைய அண்மை காண்பன னதுடம் பபேட்சையினுற் சையுத்த சையோக அற்பீயத்துவம்; அவற்றின் பூயத்துவஞ்[1] சேய்மை.

காலத்தான் வந்த பரத்துவா அபரத்துவங்களது தோற்றங் கூறுதும்.

நியமமல்லாத திக்கி லிருக்கின்ற இளையோன் மூத்தோருடைய பிண்டங்களில் இவ னவனின்றப கால சம்பந்த னென்று மிவ்வகை யவாவுதற் புத்தியால் அநுக்

---

1. பூயத்துவம்- அதிகம்.

கிரசிக்கப்பட்ட கால பிண்டங்களினுடைய
சையோகத்தாற் விளையோன் கபரத்துவந் தோன்றும்.
இவன் அவனின் இருந்த கால சம்பந்த முடையானென்-
றும் புத்தியான், முந்தோன் கட் யரத்துவந் தோன்றும்.

2.4.2.12 குருத்துவம் (திண்மை) :-

குருத்துவம். முதல் வீழ்தலி னசமவாயி
காரணம். பிரிதிவி புனல்களிலிருப்பது. சையோகம்
வேக முயற்சி யின்றிக் குருத்துவத்தால் வீழ்த வுள-
தென்று கூறப்படும்.

2.4.2.13 திரவத்துவம் :-(நெகிழ்ச்சி)

திரவத்-
துவம் முதலொழுகுதலி னசமவாயி காரணம்;
நிலந் தேயு நீரினிருப்பது. திரவத்துவம், நிலந்
தீயான நெய் பொன்களுக்குத் தீ சையோகத்தாற்
றிரவத்துவமாதலின், நைமித்திகத் திரவத்துவம்;
நீரின் இயற்கைத் திரவத்துவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.4.2.14 சினேகம்:-

சிநேகந் திரட்டுதலினேது; நீரின் மாத்திர மிருப்பது; காரண குண முதற்று; குருத்துவ முதலிய போலப் பொருளிற்குந் துணை நிற்பது.

2.4.2.15 சத்தம் (ஓசை):-

சத்தஞ் செவிப்புலனாற் கவர்வது;,ஆகாய விசேட குணம்.

அற்றாயின், அதற்குச் செவிப்புலனாற் கிரகிக்கப் படுத லெங்ஙனம்? யாண்டாயினு முரசு முதலிய இடத்திற் சத்தந் தோன்றும் செவிப்புலன் புருடனிடத்தே இருக்கும்.

அஃதொக்கும்; முரசிடத்தே தோன்றிய சத்தம் வீசிதரங்க நியாயத்தாற்றான் கதம்பமுகுள நியாயத்தாற்றானக் கணித்தான சத்தந் தோற்றுவிக்கும், சத்தமுஞ் சத்தாந்தரந் தோற்றுவிக்கு மென்னு முறைமையாற் செவிப் புலனிடத்தே யிறுதிச் சத்தந் தோன்றும். அவ்விறுதிச் சத்தஞ் செவிப்புலனாற் கிரகிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனம் வேய் பிளக்குங் காலிரு பிளவினீக்கத்திற் றோன்றிய சத்தஞ் சத்தாந்தரந் தோற்றுவிக்கு முறையானே செவிப்புல னிறுதிச் சத்தந் தோன்றும். அவ் வீற்றிற் சத்தஞ் செவிப் புலனாற் கவரப்படும். (முரசொலியினால் தோற்றுவிக்கப்பட்ட ஓசை அல்லது அதிர்வு பிறிதொரு ஓசையை அல்லது அதிர்வை ஏற்படுத்தும். இவ்வாறு ஒன்றன் பின் ஒன்றாக ஏற்படும் ஓசை அல்லது அதிர்வு செவிப்புலத்திற்கு வந்து சேரும். குவான்டும் எந்திரவியலில் சத்திச் சொட்டுக்கள் ஒன்றைத் தொடர்ந்து மற்றயது செல்வது போல ஓசை ஒலிக்கப் படுமிடத்திலிருந்து கேட்போனை வந்தடைகிறது.)

முரசோலி யென்றாற் கேட்கப்பட்டதென்றும் புத்தி யீண்டுப் பிராந்தியே. முரசொலி தோன்றுகையின் முரசாகாய சையோக அசமவாயி காரணம். முரசு குணிற் சையோக நிமித்த காரணம். வேய் பிளத்தலாற்றோன்றிய சடசட வொலித் தோற்றத்தின், வேய் பிளவாகாய சையோக மசமவாயிகாரணம், இருபிளவினீக்க நிமித்தகாரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙன முதலொலி சையோகத்தாற் றோன்றியதும் விபாகத்தாற் றோன்றியதுமாம். முதல் தொலிர்நீரு மொலிகள் சத்தத்தை யசமவாயி காரணமாக வுடையன. அநுகூலவாயு நிமித்த காரணம். சையோகத்தால், விபாகந்நாற், சத்தத்தாற் சத்தந் தோன்றுமென்று பிறருங் கூறினர். முதலது முதலான எல்லாச் சத்தங்களுக்கும் ஆகாயமே சமவாயிகாரணம். வினை புத்திபோல முக்கண மாத்திர அவத்தையது. அவற்றுள் முதனடுவொலிகள் காரிய சத்தத்தாற் கெடும். ஈற்ற நீற்றயலா லீற்றய லீற்றுற் சுந்தோபசுந்த நியாயத்தாற் கெடுமென்பது பொருந்தாது; முக்கணவவத்தையான வீற்றதுடைய இரண்டாங்கணத்திலிருப்பதான மூன்றுங்கணத் தில் லையான ஈற்றயலாலீற்றுக்கேடு தோன்றல் பொருந்தாமையின். அதலி னீற்றயற் கேட்டானே யீற்றுக்கேடு. சத்தத்தின் கேடுமோனத்தால். அங்ஙனமன்றோ? சத்த மனித்தியம்; சாமானியமுடையதாய் நம்மனோர் புறவிந்திரியத்தாற் கவரப் படுதலின்; குடம்போல. இதில் சத்தத்திற்குடைய அனித்தியத்-துவஞ் சாத்தியம்; அனித்தியத்துவமும் விநாசத்தோடு கூடிய சொரூபத்துவம். விநாசத்தோடு கூடிய சத்தை பொருந்தாது; சத்தையில்லாத பிராகபாவத்தில் அனித்தியத்துவமின்மை வரல்வேண்டுதலின். சாமானிய முடையதாய் நம்மனோர் புறவிந்திரியத்தாற் கிரகிக்கப்படுத லேது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரியத்தாற் கிரகிக்கப்படுதலென்று கூறி லான்மாவின் வியபிசாரம் வருதலின் புறவிந்திரியமென்று கூறப்பட்டது.

புறவிந்திரியத்தாற் கவர்வதான அதனோடு வியபிசாரம் வருதலின் அதை விலக்கும் பொருட்டு நம்மனோரென்று கூறப்பட்டது. யோகி யுண்மையிற் பிரமாணம் யாது? கூறும்; பரமாணுக்க ளொருவர்க்குக் காட்சி; பிரமேயமாதலின். குடம் போல யாவன் பரமாணுவைக் காண்பா னவனே யோகி. அங்ஙனமாயிருஞ் சாமாநியாதிகளோடு வியபி-சாரம் வருதலின். சாமாநியமுடையதாய் என்று கூறப்பட்டது.

2.4.2.16.புத்தி:-

பொருள் விளக்கம் புத்தி.

2.4.2.17 சுகம் (இன்பம்):-

பிரிதி சுகம்; அது, எல்லாரானு மநுகூலமாக அறியத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.4.2.18. துக்கம் (துன்பம்) :-

பீடை துக்கம். அது எல்லாராலும் பிரதிகூலமாக அறியத்தக்கது.

2.4.2.19. இராகம் :- இராகம் இச்சை

2.4.2.20. துவேஷம் (வெகுளி) :- குரோதந்துவேஷம்

2.4.2.21. பிரயத்தனம் (முயற்சி) :- ஊக்கம் பிரயத்தனம்

புத்தியாதி யாறும் மானதக் காட்சி. (புத்தி, சுகம், துக்கம், இராகம், துவேஷம், பிரயத்தனம் என்ற ஆறும் மானதக் காட்சியால் அறியப்படுவது).

2.4.2.22. தருமம் (புண்ணியம்), 2.4.2.23. அதருமம்

தருமாதருமங்கள் சுக துக்கங்களுக்கு காரணங்கள். அவை காட்சியல்ல; அனுமிக்கப்படும். தேவதத்தனுடம்பு முதலிய தேவதத்தன் விசேட குணத்தாற் றோன்றின; காரிய -மாய்த் தேவதத்தனுக்குப் போகவேதுவாதலின்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது தேவதத்தன் முயற்சியாற் பிறந்த பொருட் போலும். யாதுடம்பு முதலியவற்றைத் தோற்றுவிப்ப-தான ஆன்ம விசேட குணம். அதுவே தருமமும் அதருமமும்; முயற்சி முதலியன உடம்பு முதலியவற்-றைத் தோற்றுவியாமையின்.

2.4.2.25. சம்ஸ்காரம் (வாசனை):-

சம்ஸ்காரம், வேகம்; பாவனை; திதித்தாபகமென மூவகை.

2.4.2.24.1 வேகம்:-

அவற்றுள், வேகம் பிரிதிவி முதனான்கி(ம்), மனத்திலுமிருப்பது; விளக்கேது.

2.4.2.24.2 பாவனை:-

பாவனை யென்றுஞ் சம்ஸ்காரம். ஆன்மாவின் மாத்திரையா யிருப்பது. அநுபவத்தாற் றோன்றியது. நினைவிற் கேது. அதுவு மெழுந்தே நினைவைத் தோற்றுவிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதல் துணையுண்டாதல்; சம்ஸ்காரிக்குத் துணைகள் ஒப்புமை காண்டன் முதலியன.

ஒப்புத்திர்உஷ்டகு, சிந்தை முதலியன உள்ளுதல் வித்தை-யுணர்த்து வனவா மென்று பிறருங் கூறினர்.

2.4.2.24.3 திதித்தாபகம் (நிலைபெறுதல்):-

திதித்தாபகம் பரிசம் போல விசேடித்திருப்பது. தனக்கிடமாய் வேறொரு வடிவான தரு முதலியவற்றிற் கந்நிலைமையை மீட்டு ம(அ)டைவிப்பது. இப் புத்தி முதற் றருமாதருமமீறான-வையும் பாவனையும் ஆன்ம விசேட குணம். குணங்கள் கூறினும். கருமம் கூறுதும்.

2.4.3 கருமம்

புடை பெயர்ச்சி கருமம்; குணங்கள் போலத் திரவிய மாத்திரத் திருப்பது; மூர்த்தத்துவ பரியாய நாமமுடைய விபுவல்லாத பொருளின் பரிமாணத்தோடு கூட ஒரு பொருளிற் சமவேதித் திருப்பது; வியாபக வழியான், முதலிடத்திற் சையோக நாசத்தில்; பின்னிடத்தின் சையோகவேது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதல், விழுதல், முடக்கல், நீட்டல், நடத்தலென்-
றங் (2.4.3.1/ 2.4.3.2/2.4.3.3/
2.4.3.4/2.4.3.5) கூறபாட்டால் ஐவகை.
சுழறன்$_1$ முதலியன நடத்தலுள் அடங்கும்.

2.4.4 சாமானியம்:-

அ அநுவிருத்தி ஞானவேது சாமானியம்;
திரவிய முதன் மூன்றிலிருப்பது. சாமானியம்,
நித்தியம், ஏகம், அநேகானுகதம்.
அதுவும் பரமெனவும் , அபரமெனவும் இருவகை.

2.4.4.1 பரம் (உண்மைத்தன்மை):-
2.4.4.2 அபரம்

அவற்றவட் பரஞ் சத்தை; பல
விடையமாதலின்.

---

1. உட்சேபணம், அவட்சேபணம், ஆகுஞ்சநம், பிரசா-
ரணம், கமநமென வடநூலிற் கண்டன. இங்ஙன முறையே
எழுதல், விழுதல், முடக்கல், நீட்டல், நடத்தலென
மொழி பெயர்க்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அாவிருத்தி ஞான மாத்திர மேதுவாதலிற் சாமானிய மாத்தி-
ரம். அபரந் திரவியத்தூவ முதலிய; அற்ப விடையமாதலின்.
அதுவும் வியாவிருத்திக்கும் 2 ஏதுவாதலிற், சாமானிய விசேடம்.
இதில் வியாத்தியின் வேருன சாமானிய மில்லென் ஞெருவன்
கூறினுன்; இதிற் கூரம்: ஆயிற் பின்னமாய் வேறுபட்ட
இலக்கணமுடைய பிண்டங்களி னேகாகார பத்தி யெல்லாவற்றி
மடைந்த வொன்ற னையே யல்லாமல் யாதைய் பற்றி நிற்கும்?
அதுவே சாமானியமென்க. அற்பியின் தானதல்லதி னீக்கத்தாற்
பண்ணப்பட்டதே அவற்றுள் ஏகாகார புத்தியாக. அங்ஙன-
மன்றோ எல்லா ஆ வடிவிாம் ஆ வல்லாத புரவி முதலியவற்றி
னீக்க முண்டு; பல ஆ வடிவனி இவ்வேகாகார ஞானம்
ஆ வல்லதி னீக்க விடைய முடையதே விதி ரூபமான
ஆத்தன்மை யோாபியான சாமானிய விடையமன்றேயெனின்;
இங்ஙனமன்று; விதிமுகத் தானே யேகாகாரங் கவர்தலின்.

2.4.5 விசேடம்

விசேடம் ,நித்திய திரவியத் திருப்பது;

---

2. வியாவிருத்தி - நீக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாவிருத்தி புத்தி மாத்திரத்திற் சேறு. நித்தி-யத் திரவியங்கள் ஆகாய முதலிய வைந்து; பரமாணு ரூபமான பிரிதிவியாதி நான்கு.

2.4.6 சமவாயம்

நீக்க மின் றிருப்பவற்றின் சம்பந்தஞ் சமவாயம். அது கூறப்பட்டதே. அற்றாயின்; அவயவ அவயவிகள், நீக்க மின்றிருப்பன, ஆதலின-வற்றது சம்பந்தஞ் சமவாயமென்பது பொருந்தாது; அவையவத்தின் வேறு யவையவியின்மையின். பரமாணு-க்களன்றோ அங்ஙனம் பல கூடி யிது குடமென்று கவ-ரப்படும். இதிற் கூறுதும். குடம் பரியதென்றுங் காட்சியுண்டு. அது பலவாய்ப் பரியதல்லாதாய்ப் புலப்படாததாகிய பரமாணுக்களிலே யுண்டாதற்காது. இப் புத்தி மயக்க மென்னில், அன்று; பாதகமின்மையின்.

ஆதலினிங்ஙனந் திரவியாதி யாறு பொருளுங் கூறப்பட்டன. அவை விதிமுக ஞானத்தால் அறியப் படுதலிற் பாவரூபங்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.4.7 அபாவம்

இப்பொழுது நிடேதமுகப் பிரமாணத்தால் அறிவதாகிய அபாவமான ஏழாம் பதார்த்தங் கூறதும்.

அவ்வபாவம் சமுசர்க்கா பாவமெனவும், அன்யோந்யா-பாவமெனவும் வகையா லிரண்டு.

சமுசர்க்காபவம் பிராகபாவமும் பிரத்துவம்சாபாவமும், அத்தியந்தா பாவமுமென மூவகை.

உட்பத்திக்கு முன் காரணங்களிற் காரியமின்மை பிராகபாவம்? எங்ஙனம், நூல்களில் ஆடையில்லை; அஃதனுதி; தோற்றமின்மையின். கெடுவதுங் காரியமே; அதன் கேடாதலின்.

தோன்றிய காரியத்திற் காரணங்க ளின்மை பிரத்துவம்-சாபாவம்- கெடுதலென்ற மளவு. எங்ஙனம் குடமுடைகையி லோட்டில் குடமில்லை; கோலா லடித்தல் முதலியவற்றிற் பிறப்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது தோன்றுவ தாயினுங் கேடில்லது; கெட்டது மீண்டுந் தோன்றுமையின்.

முக்காலத்தினு மின்மை யத்தியந்தா பாவம். எங்ஙனம்? வாயுவி லுருவமில்லை.

அன்யோன்யா பாவந் தாதான்மியத்தைப் பிரதியோகியாகவுடைய அபாவம். எங்ஙனம்? குடமாடையன்று. இங்ஙனம் அருத்தங்கள் கூறப் பட்டன.

அற்பியின் ஞானத்தினும் பிரமத்தினும் வேறான பொருளில்லையெனின். அங்ஙனமன்று; அருத்தங்கள் காட்சியான் மறைக்கப்படாமையின்.

## 2.5 புத்தி

புத்தி, ஞானம், உபலத்தி, பிரத்தியயமென்பன முதலிய பாரியாயச் சொற்களால் யாது கூறப்படும். அது புத்தி. புத்தி பொருள் விளக்கும். அது அநுபவமும், ஸ்மரணமுமென (நினைவு) வகையான் இரண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.5.1 அனுபவம்:-

அனுபவம் யதார்த்தம், அயதார்த்முமென இருவகை.

அவற்றுள், யதார்த்தமாவது அவிசம்வாதமாய்க் காட்சி முதலிய பிரமாணங்களாற் றோன்றுவது. எங்ஙனம்? குற்றமில்லாத கட்புலமுதலியவற்றாற் குட முதலிய ஞானம்; புகையை இலிங்கமாகவுடைய தீ ஞானம்; ஆ வொப்புகை காண்டலா லாமா வென்றுஞ் சத்த வாச்சிய ஞானம். "சோதிட்டோமத்தாற் றுறக்கம் வேண்டியான் வெட்க" வென்பது முதலிய வாக்கியத்தாற் சோதிட்டோமத்திற்குத் துறக்க சாதனத்துவ ஞானம்.

அயதார்த்த மருத்தத்தை நீங்கிளது- அப்பிரமாணத்தாற் றோன்றுவது. அது சமுசயம், தருக்கம், விபரியயமெ மூவகை. சமுசய தருக்கங் கள் மேற் கூறுதும். விபரீத மஃதல்லதின் கண் கவர்ச்சி-பிரமமென்றமளவு. எங்ஙனம்? முன்னர்த் தோன்றும் வெள்ளியல்லாத இப்பியின இது வெள்ளியென்று வெள்ளி வருவித்தல். , .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.5.2 ஸ்மரணம் (நினைவு) :-

ஸ்மரணமும் யதார்த்தமும், அயதார்த்தமு-
மென இருவகை. யதார்த்தம் நனவில், கனவிலெல்லா
ஞானமும் அயதார்த்த ஸ்மரணம்; குற்ற வசத்தால்
அதுவென்புழி யிதுவென்பது தோன்றலின் எல்லா
ஞானமும் நிராகாரமே. அருத்தத்தாற் றனதாகாரந்
தோன்று மென்யதன்று சாகார ஞான வாத நிராகரி-
த்தலின். ஆதலினுளே ஞானகாரத்தால் அருத்தா-
மானமும் தள்ளப்பட்டது; குட முதலியன காட்சியாத-
லின், எல்லா ஞானமும் அருத்தத்தாற் கூறப்படுவன.
அது பொருளோடு கூடிய மனத்தால் அறியப்படுதலின்
நான் குட ஞானவானென்றிவ்வளவுற் தோன்றும்.
ஞான மாத்திரவான் நானென்று தோன்றுது.

## 2.6 மனம்

அகவிந்திரியம் மனம். அதுவும் கூறினும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.7 பிரவிருத்தி (செயல்)

பிரவிருத்தி தருமாதருமங்கள்; பிரவிருத்தி சகவியவ-காரத்தின் காரணமாதலின்.

2.8 தோடம் (தோஷம்)

தோடம் இராசதத் த்வேஷ மோகங்கள், இராகம், இச்சை, த்வேஷம், குரோதம், மோகம், பொய்மையறிவு வியாரிய்மென் மனவு,.

2.9 பிரேத்தியபாவம்

பிரேத்திபாவம், மீண்டும் பிறத்தல், அது ஆன்மா புதிய உடம்போடு கூடுதல்.

2.10 பலம் (பலாபலன்)

பலம் போகம்; சுக துக்க அநுபவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.11. துக்கம்

துக்கம் பீடை; அறவுங் கூறினும்

## 2.12 அபவர்க்கம் (வீடுபேறு)

அபவர்க்கம் மோட்சம். அதுவும் இருபத்தொரு வகைத்துக்கம் முழுவதும் கெடுதல். இருபத்தொருவகை: உடம்பு, ஆறிந்திரியங்கள், ஆறு விடையம், ஆறு ஞானம், சுகதுக்க மென்பனவே. இங்ஙனங் கொள்ள முக்கிய பேதாத்தாற் சுகதுக்கத்தோடு கூடலிற் றுக்கமென்று பசரிக்கப்படும். கூட்டம், நீங்காதிருத்தல். இவ்வுபசாரம், தேன் விடத்தோடு கூடிற் றேனும் விடக் கூற்றில் வைத்தல் போல. அவ்வபவர்க்க மெங்ஙன முண்டாமெனிற் கூறுதும். நூலா லறியப்பட்ட யதார்த்த சொரூப முடையனாய் விடையக் குற்றங் காண்டலால் விருத்தியாய் வீ டின்ப வேட்கையுடையனாய்த் தியான பரிபாக வசத்தாற் றோன்றின வா(ஆ)ன்மாவுடையனாய்க் கிலேச நீங்கினவனாய் நிட்காம கருமானுட்டானத்தால் வருவதான தருமா தருமமீட்டாதவனாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னடைந்த தருமாதருமக் கூட்டத்தை யோகப் பெருமையா லறிந்தொருங்கு நுகர்வாருக்கு முன்னர்க் கரும நிவிர்த்தியி னிகழ்கின்ற உடம்பு நீக்கத்தில், வரு முடம்பின்மையின், இருபத்தொரு துக்கச் சம்பந்தமுண்டாகா; காரண மின்மையின். இருபத்தொரு துக்கக் கேடு **மோட்சம்** அது, அபவர்க்கம். இனிச் சம்சயங் கூறுதும்.

## 3. சம்சயம்

ஒரு தருமியின் மாறுபட்ட பலபொருள் ஞானம் சம்சயம். அது மூவகை.

ஒன்று விசேடங் காணுதிருக்கையிற் சமான தரும தரிசனத்தாற் றோன்றியது. எங்ஙனம்? குற்றியோ மகனோ-வென்று முன்னிற்கு மொரு பொருளின் கண்ணே குற்றிமை துணிவிக்கும். வளைவு பொந்து முதலியன-மகன்மை துணிவிக்குந் தலை கை முதலியனவென்று விசேடங் காணுதைக் குற்றி மகற் கொத்த வுயர்ச்சி வடிவு காண்பானு மகற்கு, இவ்வுருக் குற்றியோ மகனோவென்று சம்சய முண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாஞ் சம்சயம் விசேடங் காணுதிருக்கை-யில் விபாதத்தாற் றேன்றுவது. இச் சொல் நித்தியமோ அனித்தியமொவென, ஒருவன் சொல் நித்தமென, மற்றொருவன், அனித்தமென்னில்; அவரது விவாதத்தால், விசேடங் காணுத நடுவிருந்த மகற்கு. இச் சொல் நித்தியமோ அல்ல தனித்தியமொவென்று, சம்சயமுண்டாம்.

அசாதாரண தருமத்தாற் றேன்றிய சம்சய மெங்ஙனம்! நித்திய அனித்தியத்தி னீங்கின நிலமாத்திரத் திருப்பதன் அசாதாரண தருமமான மணமுடைமையால் விசேடங் காணுற்கு நிலத்தி னித்தியாநித்தியத்துவ சம்சயமுண்டாம் அங்ஙனமன்றே, எல்லா நித்தியத்துவ நீங்கின மணமுடைமையோடு கூடுதலின் நிலம் அனித்தியமோ அல்லது எல்லா அனித்தியத்துவ நீங்கின வதனேடு கூடுதலின் நித்தியமோ வென்று சம்சயம்.

•

## 4. பிரயோசனம்

எதனை வேவப்பட்டு மகன் முயலாநின்றான், அது பிரயோசனம். அது சுகமடைதல்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரக்கக்கேடு. வாளாவிருப்பதற்கு அதின் பொருட்டன்றே முயற்சியும்.

5. திட்டாந்தம்

வாதிபிரதிவாதிகட் குடம்பாடு விடையமான அருத்தந் திட்டாந்தம். அது இருவகை. ஒன்று சாதருமி திட்டாந்தம். எங்ஙனம்? புகையுடைமை யேதுவின்க ணட்டில். இரண்டாவது வைதருமி திட்டாந்தம். எங்ஙனம்? அவ்வேதுவிற்கே மடு.

6. சித்தாந்தம்

பிராமாணிசத்வத் தன்மையா லுடம்படு மருத்தஞ் சித்தாந்தம். அது சர்வ தந்திரம். பிரதிதந்திரம், அதிகரணம், அபியுபகமமென நால்வகை.

அவற்றுட் சர்வதந்திர சித்தாந்த மெங்ஙனம்? தருமி மாத்திர வுண்மை.

இரண்டாவ தெங்ஙனம்? நையாயிகர்க்கு மன மிந்திரியம். அதுவுஞ் சமான தந்திரமான வைசேடியத்திற் சித்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவ தெங்ஙனம்? நில முதலானவற்றின் கருத்தாச் சித்திசையி லவனுக்குச் சர்வக்ஞத்துவம்.

நான்காவதெங்ஙனம்? சைமினியினுடைய நித்தியாநித்திய விசாரமெப்படியர்யினு மாகச் சத்தங் குணமென்பது.

## 7. அவயவம்

அனுமான வாக்கியத்தினுடைய ஏகதேசங்க ளவயவங்கள். அவை பிரதிக்ஞை முதலாயினவை. அங்ஙன நியாய சூத்திரமும்; பிரதிக்ஞை யேது வுதாரண உபநய நிகமனங்க ளவயவங்கள்.

அவற்றுட் சாத்திய தரும விசிட்ட தருமிப் பிரதிபாதக வசனம், பிரதிக்ஞை. எங்ஙனம்? இம் மலை தீயுடைத்தென்பது.

பஞ்சமி யந்தமான லிங்கப் பிரதிபாதக வசனமேது? எங்ஙனம்? புகையுண்மையி னென்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாத்தியோடு கூடின திட்டாந்த வசன முதா-
கராம். எங்ஙனம்? யாது புகையுடைத்து அது தீயுடைத்து.
எங்ஙனம்? அட்டில் என்பது பக்கத்தில் இலிங்கத்தி முபசங்-
கார மு(உ)பநயனம் எங்ஙனம்? இதுவும் புகையுடைய
தென்பது. பக்கத்திற் சாதநியத்தி முபசங்கார
நிகமனம் எங்ஙனம்? ஆகையாற் றீயுடைய தென்பது இப்
பிரதிஞ்ஞை முதலைந்தும் அநுமான வாக்கியத்தின் யஞ்சாவய-
ங்கள்; அவையவம் போல,

## 8. தருக்கம்

அனிட்டப் பிரசங்கந் தருக்கம்— சித்தமான வியாத்-
தியையுடைய தருமங்களுள் வியாப்பிய வங்கீகாரத்தால்
வியாபகத்தின் வரவு. எங்ஙனம்? ஈன்டுக் கடமுண்டாயிலப்
போது நிலம்போலக் காணப்படுமென்பது. இத் தருக்கம்
பிரமாணத்துக் காக்கிராகம். அங்ஙனமன்றே இம் மலை
தீயுடையதோ வி(அ)ல்லதோ வென்ற மை(ஐ)யத்தின்
பின், ஒருவன் தீ யில்லதென்று கருதின் அப்போ தவனைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்துக், தீயில்லதாயினதனுற் புகையில்லதுமா ஈ
வேண்டுமென்ற புகையில்லாமையின் வரவு. பண்ணப்
படும். அதுவே தருக்கம். அனிட்டப் பிரசங்கமென்-
றுஞ் சொல்லப்படும். இந்தச் சாத்திய ரூபமான
அர்த்தம் நிகழ்கின்ற தர்க்கத்துக்கு விடயம்;
தீயில்லாமையைத் தள்ளுதலால். ஆதலில் அனுமானத்-
துக் கருக்கிராகம். தருக்கஞ் சமுசயத்தில(அ).
டங்குமென் றொருவன் சொல்வான்; அது பொருந்தாது;
ஒரு சார்வையுடைய விடையத்தையுடைய தாகையால்.

## 9. நிர்ணயம்

அவதாரண ஞானம் நிர்ணயம். அது பிரமாண
பலம்.

## 10. வாதம்

தத்துவ[1] மறிய வேண்டுவான் கதை வாதம்.

---

1. தத்வம்-மெய்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது எட்டு நிக்கிரகங்கட் கதிகரணம். அட்ட நிக்கிரகங்களாவன. நியூனம், அதிகம், அபசித்தாந்தம், ஏத்துவாபாச பஞ்சகம்.

## 11. சற்பம்

உபய சாதன முடையதாய் வெல்லவேண்டுமென்ற மிச்சை யுடையான் கதை சற்பம். அது, எல்லா நிக்கிரகத்திறுங் கிடைத்ததிற் கதிகரணம். பரசட்சந் ஞா உதிக்கப் படுகையிற் சுபட்ச சாதனப் பிரயோக முடிவாயுள்ளது சற்பம்.

## 12. விதண்டை

சுபட்ச தாபனஹீனமாய்ப் பரபட்ச தூஷணமாத்திர முடிவாயுள்ள கதை விதண்டை. இவை தண்டிகருக்குப் பட்சமில்லை. சொல்வார் யலரையுடையதாய்ப் பூர்வோத்தர பட்சத்தைப் பிரதிபாதிக்கும் வாக்கியக் கோவை கதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. ஏத்ருவா பாசம்

சொல்லப்பட்ட பக்கத் தருமத்ருவ முதலான ரூபங்களுளொரு ரூபத்தாற் குறைந்தாலு மேருவல்ல. அருவுஞ் சில ரூப யோகத்தால் ஏருவைப் போலத் தோன்ற ஏதுப்போலிகளாம். அவை அசித்தம், விருத்தம், அநைகாந்திகம், பிரகரணசமம், காலாத்தியாபதிட்ட மென்றும் பேதத்தால் ஐவகை.

## 13.1 அசித்தம் (நிறுவப்படாப் போலி)

அவற்றுள் உதயனால் "வியாத்தமான ஏருவினுடைய பக்க தருமதையின் ஞானம் சித்தி; அதனுடைய அபாவமு அசித்தி." யென்ற(அ) சித்த லக்கணஞ் சொல்லப் பட்டது. அதுவும் விருத்த முதலானவற்றிற் முன்டென்று சாங்கரியந் தோன்றுகின்றது; ஆயினு மெவ்வாறு சாங்கரிய மின்றே மவ்வாறு சொல்லப்படும். யாதைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனத்தின் முன்னே தோன்றுந் தோஉத ஞானத்தில் சமர்த்தமாம் அதுவே தோட ஞானத்தைப் பண்ணும்-மாடமென்ற மளவு; வேறல்ல; முன்னே தோன்றின வத்துலே தோஉத மறிவிக்கப்படுகையிற் கதை முடிவாயின், அந்நியத்துக் குபயோக மின்மையின். யாது விபரீத விய..க்-தியாற் றேட ஞானத்தைப் பண்ணுமதுவே விருத்தவேதுப் போலி. யாவை வியபிசாராதிகளா லப்படியாகும். அவை அனைகாந்திக முதலாயினவை. அவைகள், வியாத்தி பக்க தருமத்துவ விசிட்ட ஏதுச்சொருப ஞான மில்லாமையான் முன் சொல்லப்பட்ட் அசித்தங்கள்; தோட ஞானத்தைப் பண்ணுமென்றமளவு.

அசித்தம், ஆசிரையாசித்தம், சொருபாசித்தம் வியாப்பியத்துவா சித்தமென மூன்று வகை.

13.1.1 ஆசிரையாசித்தம்:-

அவற்றுள் எவ்வேதுவுக் காசிரைய மறியப்படாதது. ஆசிரையாசித்தம் எங்ஙனம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ககநாரவிந்த மனமுடையது; அரவிந்தத் தன்மையால்; மருவிற் றுமனரபோல. இதிற் ககநாரவிந்தம் ஆசிரையம். அஃது மின்றே. கடமநித்தியம், காரியத்துவத்தால், குடம் போலவென்பது மாசிரையா சித்தம்.

அற்றுயின், ஆசிரய முன்மையாற் காரியத்-துவ ஏ தாசிரயாசித்த மன்று. சித்தசாதன மாயினுக. சித்தமான கடத்தின் அநித்தியத்துவத்-தைச் சாதிக்கையால்; இங்ஙனமன்று; சொரூபத்தா லொன்றுசிரயமன் றாமானத்திற்கு மற்றென்னெனில் ஐயம். அரபலத்தத்திரம், நிச்சிதார்த்தத்திரம் நியாயம் வழங்காது, மற்றெவ் விடத்தென்னி லையப் பொருளிலேயே என்ற நியாய மிருக்கையிற் கடத்திலே அநித்தியத்-துவத்துக் கை(ஐ)யமில்லை; நிச்சயத்திலுலே; சொரூபத்தாற் கடமிருப்பிரம் அநித்தியத்துவ சந்தேக மின்மையால் ஆசிரயமில்லை யென்ப தாசிரயாசித்தம்- ஏது அல்லது; இது ஆசிரய முடையதன்றென்பதனுல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13.1.2. சொரூபாசித்தம்:-

எவ்வேறு வாசிரயத்தி லறியப் படாதது சொரூபா-சித்தம். எங்ஙனம்? சாமானியம் அனித்தியம், காரியத்துவத்-தா லென்பது. காரியத்துவவேறு வாசிரையமான சாமானியத்-தி லில்லை. பாகாசித்தமுஞ் சொரூபாசித்தமே. எங்ஙனம்? பிருதுவி முதலான நான்கின் பரமாணுக்களும் அனித்தியம், கந்தமுடைமையாலென்பது. கந்தமுடைமை பக்கமாறு மெல்லாவற்றிற மில்லை; பிருதுவி மாத்திரந் திருத்தலின். ஆதலின் ஒரு கூற்றிலே சொரூபாசித்தம்.

அப்படியே விசேடணசித்தம், விசேடியாசித்தம், அசமர்த்த விசேடணசித்தம், அசமர்த்த விசேடியாசித்தம் முதலானவை சொரூபா சித்த பேதங்கள்.

13.1.2.1 விசேடணசித்தம்:-

அவற்றுள் விசேடண சித்த மெங்ஙனம்? சத்தம் நித்தியம்; திரவியமாய்ப் பரிசமில்லாமையுடைமையின்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது. இங்கே திரவியத்துவ விசிட்ட பரிசமில்லாமையுடைமையேது. பரிசமில்லாமை மாத்திரமன்று; சத்தத்திற் றி(தி)ரவியத்துவமுமில்லை; குண மாதலால். ஆதலால் விசேடணாசித்தம்; திரவியத்துவமென்னும் விசேடண மில்லாமையால்; அதனோடு கூடிய பரிச மில்லாமையுமில்லை; விசேடணத்தினின்மையால் விசிட்டமு மில்லாமையால். எங்ஙனம்? புருடனாளனுயுந் தண்டமின்மையிற் றண்ட விசிட்ட புருட னிலனே. ஆதலால் பரிசமில்லாமை யுடைத்தாயினும் விசிட்ட ஏது பாவத்தாற் சொருபாசித்தமாம்.

## 13.1.2.2 விசேடியாசித்தம்:-

விசேடியாசித்தமெங்ஙனம்? சத்த நித்தியம்; பரிசமின்மையாய்த் திரவியத்துவத்தை யுடைமையால் என்பது. ஈண்டும் விசிட்டமேது; விசேடியமில்லாமையால் விசிட்ட சொருபமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13.1.2.3. அசமர்த்த விசேடாசித்தம்:-

அசமர்த்த விசேடாசித்த மெங்ஙனம்? சத்த நித்தியம், குணத்துவ முடையதாய்க் காரணாபாவத்தை யுடைமையால் என்பது. இங்கே விசேடணத்துக்குச் சிறிதுஞ் சாமர்த்திய மில்லை; விசேடியமான காரணாபாவத்துக்கே நித்தியத்துவத்தைச் சாதிக்க வலியுடைமையால் ஆதலா லசமர்த்தம் விசேடணம்; சொரூபாசித்த மென்பது விசேடணாபாவத்தில் விசிட்டமின்மையால். அற்றாயின், விசேடணமான குணத்துவஞ் சத்தத்திலிருக்கின்றதே- எப்படி விசேடணமில்லை? அஃதொக்கும்; குணத்துவ முண்மையே; ஆயினு மது விசேடண மன்று. யா தன்னியத்தைத் தள்ளு-தலென்னும் பயனுடைய தாவே யதுவுக்கு விசேடணமாம்; குணத்துவம் பயனுடைத்தன்று-அசமர்த்தமென்று சொல்லப் பட்டதே.

13.1.2.4 அசமர்த்த விசேடியாசித்தம்:-

அசமர்த்த விசேடியாசித்த மெப்படி?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிலே முன்பின்னை பிரயோகம். சத்த நித்தியம். அகாரணத்துவ முடையத்தாய் குணத்துவ முடைமையால் என்பது. இங்கே விசேடண மாத்திரமே நித்தியத்-துவத்தைச் சாதித்தலின் வலியுடையது. விசேடிய மசார்த்தம்; சொரூபா சித்த மென்பது, விசேடியாபாவத்தால் விசிட்டமின்மையால்; விசிட்ட மேறுவாய்க் கொண்டமையால். ஒழிந்தது முன் போல.

## 13.1.3 வியாப்பியத்துவாசித்தம்:-

எங்கே வியாத்தி யறியப்படாதது வியாப்பியத்துவாசித்தம். அது இருவகை; ஒன்று சாத்தியத்துடனே யுடனிகழ்ச்சிய தில்லாதது. மற்றொன்று சோபாதிக சாத்திய சம்பந்த-முடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13.1.3.1 சாத்தியத்துடனிகழ்ச்சியில்லாதது :-

யாது சத்து அது க்ஷணிகம். எங்ஙனம்? சலதர யடலம். விவாத பதமாகிய சப்தாதியுஞ் சத்து. இங்கே சப்தாதி பக்கம்; க்ஷணிகத்துவஞ் சாத்தியம்; சத்துவ மேது. இவ்வேதுவுக்குக் க்ஷணிகத்துவத்தோடு வியாத்தியிற் பிரமாண மில்லை.

## 13.1.3.2. சோபாதிக சம்பந்தி :-

கருப்பத்தி லிருக்கின்ற மைத்திரிதனயன் கரியன்; மைத்திரி மகன்மையால்; காணப்பட்ட மைத்திரி தனயர் கூட்டம் போல. இங்கே மைத்திரி மகன்மையாற் கருமை சாதிக்கப்படும். மைத்திரி மகன்மை கருமையிற் பிரயோசக மன்று. மற்றென்னெனிற் சாகாதி யாகார பரிணதியே பிரயோசகம். பிரயோசக முபாதியென்று கூறப்படும். ஆதலான் மைத்திரி மகன்மைக்குக் கருமைச் சம்பந்தத்தில், சாகாதியாகாரப் பரிணமமே யுபாதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது வெங்ஙனம்? நீக்குப் புகைச் சம்பந்தந்தில் ஈரவிறகின் சையோக முபாதி. ஈண்டு உபாதி சம்பந்தத்தால் வியாந்தியில் லையென்பது; மைத்திரி மகன்மையாலென்றமேது வியாப்பியத்துவாசித்தம். யாகத்தற் பட்ட கொலைமை யதன்மாசாதனம்; கொலைமையால்; யாகப் புறத்துக் கொலைமைபோல. ஈண்டுக் கொலைமை யதன்மசாதனத்தின்கட் பிரயோசக மன்று. மற்றென்னை- நிஷித்தத்வமே யுபாதியென்பது. முன்போல ஈண்டு முபாதி யுள்மையாற் கொலைமையேது, வியாப்பியத்துவாசித்தம். அற்றுயின் சாதன - வியாபகமாய்ச் சாத்திய வியாபகமாயது யாதது வுபாதியென்ப துபாதியிலக்கணம்; அவ் நிஷித்தத்வத்திலில்லை; அ:தெங்ஙனம் உபாதி? இங்ஙன மன்று; நிஷித்தத்வத்தி லுபாதி யிலக்கண முன்மையால். அங்ஙனமன்றே, சாத்தியமான அதன்ம சாதனத்துவத்துக்கு வியாபக நிஷித்தத்வம். எங்கே யெங்கே யதன் மசாதநத்துவ மங்கே யங்கே நிஷித்தத்வத்திலிருப்புன்மையால்; எங்கே யெங்கே கொலைமை யங்கே யங்கே நிஷித்தத்வ அவசியமன்று;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகத்திற் கங்கமான கொலையில் வியபிசாரத்தினுல் யாக அங்கமான கொலையிற் கொலைமையுண்டு; நிஷித்தத்வ மில்லை.

இப்படியே மூன்று அசித்தங்களும் காட்டப்பட்டன.

(நடுப்பதம் நிரவப்படாத அமானமாக விருப்பது அசித்தம் எனப்படும். சார்பசித்தம்:- ஆகாயத்தாமரை மணமுடைத்து; தாமரைத்தன்மையினுல். பொய்கைத்தாமரை போலும். இங்கு ஆகாயத் தாமரை கற்பனையானது. இரண்டாவது வகையான அசித்தம் சிற்றெடு கூற்றில் நடுப்பதம் இடம் பெருமையினுல் எழுவது. இதனுல் நடுப்பதத்தை சாபதத்துடன் இணைக்கும் சிற்றெடு கூற்று பொய்யாகிறது. சப்தம் நித்தியமானது; ஏனெனில் அது புலனுகக் கூடியதாதலின். இது போலியாகும் புலனுதல் என்ற எது சப்தத்தின் பண்பல்ல என்பதனுலாகும்.

வியாப்பியாத்துவாசித்தம்:- வியாத்தியின் தொடர்பினடிப்படையில் நிரவப்படாமையினுல் இது ஏற்படுகிறது. மெய்யானது அனைத்தும் குணிய நேரமுள்ளது; சப்தம் மெய்யானது. எனவே சப்தம் குணிய நேரமுள்ளது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13.2 விருத்தம் (மாறகொள்போலி)

சாத்தியத்தின் விபரீதத்தோடு வியாத்தமான ஏது விருத்தம். எங்ஙனம்? சத்த நித்தியம், காரியத்துவத்தால் என்பது. இங்கே நித்தியத்துவஞ் சாத்தியம்; அதனுடைய மாறுபாடான அநித்தியத்தே காரியத்துவ வியாத்தம். யாது காரிய மஃது நித்தியமே.

ஆதலால், சாத்திய விபரீதத்தை வியாப்பித்-தலாற் காரியத்துவ ஏது விருத்தமாகும்.

(நிறுவப்படவேண்டியதற்குத் தரப்படும் நியாயம் அதனை மட்டும் நிறுவுதற்கல்லாது, அதற்கெதிரானதை நிறுவுதற்கும் பயன்படுவதால் விருத்தப்போலி எழுகிறது. நீர் குளிர்ச்சியானது; ஏனெனில் அது சூடாக்கப்படக் கூடியதாதலின்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13.3. அநைகாந்திகம் (பிறழ்வுப்போலி)

சம்சய ஏது அநைகாந்திகம்—வியபிசாரத்தோடு கூடின ஏதுவும் அநைகாந்திகமாகும். அது சாதாரணம், அசாதாரணம் என இருவகை.

### 13.3.1 சாதாரண அநைகாந்திகம்:-

முதலாவது பக்க, சபக்க, விபக்க விருத்தி. எங்ஙனம்? "சத்தம் நித்தியம்; பிரமேயத்துவத்தால்." என்பது பிரமேயத்துவ ஏது பக்கமான சத்தத்திற் சபக்கமான நித்தியத்திலும், விபக்கமான அநித்தியத்திலு மிருக்கின்றது; எல்லாம் பிரமேயமாதலால்.

### 13.3.2 அசாதாரண அநைகாந்திகம்:-

சபக்க விபக்கங்களிலில்லாதது; எங்ஙனம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நிலம் நித்தியம்; கந்தமுடைமையால்."
இங்கே கந்தமுடைமையேது; சபக்கமான நித்திய வியோமாதியினின்றும் விபக்கமான அனித்திய சலாதியினின்றும் நீங்கினது; கந்தமுடைமைக்குப் பிரிதிவி மாத்திரத் திருப்புன்மையால்.

உண்டாகிய சபட்ச விபட்சமுடைய வேறுவுக்குச் சபக்கத்திலிருந்து விபக்கத்தி னீக்கமாய் நிற்றலே நியமமாய்க், கமகாங்கத் தன்மையிலு ளந்த நியமாபாவமே வியபிசாரம். அது இருவகையாற் கூடும்; சபக்க விபக்கத்தி லிருத்தலாலு மவற்றிலில்லாமையாலும்.

## 13.4 பிரகரணசமம் (மாறு கொள்வோல்?)

யாதுக்குப் பிரதிபட்சமான வேறு மேது வுண்டாவே பிரகரணசமம். - சற்பிரதிபட்ச மென்றுஞ் சொல்லப்படும். எங்ஙனம்? சத்த நித்தம்; அனித்திய தருமந் தோன்றுமையா லென்பது. இங்கே விபரீ தார்த்தத்தைச் சாதியா நின்ற சமானபலமாகிய வேறுமானம் பிரதிபட்சமென்று சொல்லப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாது நல்லிய பலமென்றது பிரதிபட்ச மன்று.

அங்ஙனமன்றே, விபரீதத்துக்குச் சாதகமான அநுமானம், உபசீவியம், உபசீவகம், அநுபயம் என மூன்று வகையாம். அவற்றன் முதலது வாதகம்; வலிமையை யுடையதால். எங்ஙனம்? பரமாணுக்க ளனித்தியம்; மூர்த்தமாகையால்; கடம் போல. பிரமாணத்தாற் கிரகிக்கப்படாத தருமியான பரமாணுக்களின் அனித்தியத்து வாநுமானங் கூடாது; ஆசிரையா சித்தியால். இவ்வநுமானத்தாற் பரமாணு கிரகிப்புக்குப் பிராமாணிய மறியப்பட்டது; அன்றி யிதற்குத் தோற்றமே யில்லாமையால். ஆதலால் உபசீவியம் வாதகமே. உபசீவகந் தற்பல மாவதால் வாத்தியம். எங்ஙனம்? இந்த வனித்தியத்து வாநுமானமே மூன்றுவது சற்பிரதிபட்சம்; நல்லிய பலத்தால்.

( ஒன்றேடொன்று முரண்படும் இருநியாயங்கள் ஒன்றையொன்று மறுதலிப்பனவாக அநுமானத்திலிடம் பெறுவதால் இப்போலி எழுகிறது. உ-ம்:- சத்தம் நித்தியமானது; ஏனெனில் அது செவிக்குப் புலனுதலின். சத்தம் அனித்தியமானது; ஏனெனில் உட்பத்தி செய்யப்படுதலினுல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13.5 காலாதியாபதிட்பம்

(மறய்யுப்போலி/பாதிதம்)

எதற்குப் பிரத்தியட்சாதி பிரமாணத்தாற் பக்கத்திற் சாத்தியாபாவச் சின்னம். அது காலாத்தியாபதிட்டம்-பாதித விடையமென்றுச் சொல்லப்படும். எங்ஙனம்? தீ வெம்மையில்-லது; பதார்த்தத்வத்தால்; சலம் போல. இங்கே பதார்த்தத்வம் ஏது. அதற்குத் சாத்தியம் வெம்மையில்லது. அதனுடைய அபாவங் காட்சியானே பரிச்சின்னம்; துவக்கிந்திரியத்தாற் தீயினது வெம்மையில்லாமை தள்ளப்படுகையால். இன்னுங் காலாத்தியாப-திட்ட மெங்ஙனம்? கனிகத்ரவஞ் சாதிக்கின்ற போது முன்சொன்ன சத்துவவேது. எங்கே கனிக கத்ரவத் சாத்திய மிதனுடைய அபாவமாகிய அக் கனிகத்ரவம் பிரத்தியபிமான பிரத்தியட்சத்தினுலே பரிச்சின்னம் யாதென்னுள் முன்ன மறியப்பட்டது. அதுவே யிக்குடமென்ற பூருவ அனுபவத்தாற் சனித்த வாசனையோடு கூடிய விந்திரியத்தாற் பிறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூருவாபரகாலத்தை யடைந்த பிரத்திய பிராளத்தாற் கடத்தக்கு நிலைமை தனியப்படும்.

(ஒன்றை நிறுவுதற்காகத் தரப்பட்ட நியாயம் அல்லது ஏதுவானது முரண்பட்ட ஒன்றை நிறுவுதற்கு ஏலவே பயன்பட்டு விட்டதால் பயனற்றுவிட்டது என்பதைக் காட்டுகிறது.
உ-ம்:- நெருப்பு குளிரானது; ஏனெனில் அது ஒரு திரவியமாதலின் என்ற நியாயம் தவறானது; நெருப்பின் சூடு ஏலவே பிற அறிவின் வாயில்களால் உணரப்பட்டது. எனவே மேற்படிவாதம் போலியாகும் எனக் கூறுவது பாதிதம்)

அசித்த முதலான ஐந்தும் ஏதுப்போலிகள்; யக்ஞ தருமத்துவ முதலான ரூபகீனத்துவத்தா லேது வல்லன. தத் சாத்தியத்தைச் சாதியாதன விலக்கணமாகுங் கேவல வியதி-ரேகியினுடைய அதிவியாத்தி யவ்வியாத்தியசம்பவங்களு மிவற்றடங்கும்; இவ்வைந்தின் மதிதமல்ல.

அதி வியாத்தி யுடையது வியாப்பியத்துவாசித்தம்; விபக்கத்தி னீக்கமில்லாமையால்; சோபாதிகத்துவத்தாலும். எங்ஙனம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிலக்கணம் என்னும் பகுதிருவத்துக்கு, அலே
நாடி முதலான வுண்மை பிரயோசனம். அவ்
வியாத்திக்குப் பாகாசித்தம். எங்ஙனம்?
கோவிலக்கணமென்றுத் சித்திர வன்னமான அலே
நாடி. அசம்பவத் சொருபாசித்தம்; கோவி-
லக்கணமான ஒரு ளம்புடைமை

## 14 சலம் (வக்ச லோ/அதீதி)

தாற்பரியம் வேறுபடச் சொல்லுஞ்
சொல்லுக்குப் பொருள் வேறு கற்பித்துத்
தூடணஞ் சொல்லுதல் சலம். எங்ஙனம்? •நூதன
தாற்பரியத்தாற் சொல்லப்பட்ட நவகம்பளமுடையா
னிம் மைந்தனென்னும் வாக்கியத்திற்கு வேறு
யொருளா யாசங்கித் தொருவன், இவனுக்கு
நவ கம்பளங்களில்லே. -வறுமையால் டிவனுக்
கிரண்டாயிரமில்லே- எங்ஙன மொன்பதென்று தூ
டிய நின்றுன். இவ்வாதி சலவாதியாதலாற்
றேற்றவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. சாதி (போலியுத்தரம்)

அசத்தான உத்தரஞ் சாதி—உற்கருஷசமை, அப-கருஷசமை முதலான பேதத்தாற் பலவகை. பெருகு மென்றும் பயத்தா லெல்லாஞ் சொல்லப்பட்டனவல்ல. அவற்று ளவ்வியாத்தமான திட்டாந்த தருமத்தாற் சாத்திய அவ்வியா-பகத் தருமத்தை வருவித்த லுற்கருஷசமை யென்றுஞ் சாதி. எங்ஙனம்? சத்த மனித்தியம், காரியத்துவத்தால். கடம் போலவென்று சொல்லுதற்கண்: ஒருவனிங்ஙனஞ் சொல்லா நின்றான், காரியத்துவ வேதுவாற் கடம்போலச் சத்த மனித்தியமாயின் அந்த வேதுவாலே அது போலவே சத்தஞ் சாவயவமாக வேண்டுமென. அவ்வியாத்தமான திட்டாந்த தருமத்தால் அவ்வியாபகமான தருமத்தினையாவதனைத் வருவித்தல் அபகருஷசமை யென்றும் சாதி. எங்ஙனம்? முன் சொன்ன அனுமானத்தில் ஒருவன் இங்ஙனஞ் சொல்லாநின்றான், காரியத்துவ வேதுவாற் கடம்போலச் சத்தம் அனித்தியமாயின், அந்த வேதுவாற் கடம்போலச் சத்தமுஞ் செவியாற் கவரப் படாததாக வேண்டும், கடஞ் செவியிற் கவர்வதன்றேயென.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17. நிக்கிரகத்தானம் (தோல்வித்தானம்)

தோல்வியேறு நிக்கிரகத்தானம். அறு நூனம், அதிகம், அபசித்தாந்தம், அர்த்தாந்தரம், அபபிரதிபை, மதானுக்ஞை, விரோதம் முதலான பேதத்தாற் பலவிதமாயினும் பெருகுமென்று சொல்லப்பட்டவையல்ல. சொல்ல வேண்டிய பொருளிற் சிறிது குறைதல் நூனம். சொல்ல வேண்டிய பொருளி னதிகம் அதிகம். சித்தாந்-தந்தில் கேடு அபசித்தாந்தம். பிரகிருதத்திற் சம்பந்தமான பொருளுடைய சொல் லர்த்தாந்தரம் உத்தரத்தினறு தோன்றுமை அப்பிரதிபை. தனக்குப் பிரதிகூலமாய்ப் பரனுக்குச் சம்மதமான வர்த்தத்தைத் தானே யங்கீகரித்தல் மதானுக்ஞை. இட்டார்த்த பங்கம் விருத்தி. ஈண்டு மிகவும் வேண்டாமையாகிய ரூப பேதங்களுக் இலக்கணம் கூறுமை குற்றமன்று;

தருக்கபாஷை முற்றியது.

****************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org